பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

# வலம்புரி

# Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி 09 | வெள்ளிக்கிழமை | (26.09.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 281

## மன்னார்-மடுவீதி திறக்கப்பட்டது

(மன்னார்)

மன்னார்-மடுவீதி பொது மக்களின் போக்குவரத்துக்காக நேற்றுத் காலை திறந்து விடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10 மணிக்கு இடம் பெற்ற இவ் வீதித்திறப்பு விழாவின் போது விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அமிர்தா, வன்னி மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலா, மன்னார் அரச அதிபர் வே.விஸ்வலிங்கம், மன்னார் காவல்துறை அதிகாரி சாந்தன், அமைச்சர் பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தனா உட்படப் பலர் கலந்து

(10ம் பக்கம் பார்க்க)

# தியாகி திலீபனின் இறுதி நிகழ்வுகள் இன்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தியாகி திலீபனின் 16-ம் ஆண்டு நினைவு தின இறுதிநாள் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளும் அஞ்சலிக் கூட்டங்களும் இன்று கோட்ட ரீதியாக எழுச்சியுடன் நடைபெறவுள்ளது.

யாழ-நல்லூர், வலிகாமம் கோட்டங்களுக்கான நிகழ்வுகள் நல்லூர் முருகன் ஆலய முன்றலிலும் தென்மராட்சிக் கோட்ட நிகழ்வுகள் மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலய முன்றலிலும், வடமராட்சிக் கோட்ட நிகழ்வுகள் அல்வாய் ஸ்ரீமுத்துமாரி அம்மன்ஆலய முன்றலிலும் தீவகக் கோட்ட நிகழ்வுகள் புளியங்கூடல் முத்துமாரி அம்மன் ஆலய முன்றலிலும் நடைபெறவுள்ளது.

அனைத்துக் கோட்டங்களிலும், அடையாள உண்ணாவிரத நிகழ்வுகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து மாலை 6 மணிக்கு கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

இதேவேளை நல்லூர் ஆலய முன்றலில் அஞ்சலிக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் காலை 8.30 மணிக்கு திலீபனின் நினைவுத் தூபி

(10ம் பக்கம் பார்க்க)

# நோர்வேயின் சமாதான முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படும்!

## நோர்வே வெளிவிவகார அமைச்சர் உறுதி

(நியூயோர்க்)

**இலங்கையரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்புக் குறித்துப் பல்வேறுபட்ட விமர்சனங்கள் எழுந்துள்ள போதும் அச்சமாதான முயற்சிகளுக்கான தமது ஆதரவு தொடர்ந்தும் வழங்கப்படுமென்று நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர் சென் தெரிவித்துள்ளார்.**

நியூயோர்க்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து உரையாடியபின் செய்தியூடகம் ஒன்றிற்கு அளித்த பேட்டியிலேயே நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சென் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

தற்போது இடம் பெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தையின் பிரதான தரப்பினர்களான இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் நோர்வே அளித்து வருகின்ற பங்களிப்புக்கு எதிர்ப்புணர்வு இலலாவிடில் எமது உதவிகள் எதிர்காலத்திலும் தொடரும்.

வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை குறித்த தமது திட்டவரைபை விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் ஒப்படைத்த பின்னர் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படக் கூடும். எனினும் இப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப் படுவதற்கான திகதியை என்னால் திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளது என்றும் ஜோன் பீற்றர்சென் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின்

(10ம் பக்கம் பார்க்க)

### பிரபாவின் படத்தை வைத்திருந்ததற்காக

## யாழ்.பல்கலை மாணவர்கள் முகமாலையில் தடுக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் படத்துடன் முகமாலைச் சோதனைச் சாவடியூடாக வந்த யாழ்.பல்கலைக் கழக மாணவர்களை சோதனைச் சாவடியில் உள்ள படையினர் வழிமறித்ததுடன் அவர்கள் தமது பயணத்தைத் தொடரவும் அனுமதி மறுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள் நேற்று யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்தபோதே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தேசியத் தலைவரின் படம் இன்றி வந்தால் மட்டுமே பயணத்தைத் தொடர அனுமதிக்கலாமென படைத் தரப்பினர் கூறியதால் இருதரப்பினருக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மாணவர்களைத் தாக்கவும் முற்பட்டனர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து பொது மக்களும் தமது பயணத்தைத் தொடராது வாகனங்களை ஆங்காங்கே நிறுத்திவிட்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த இராணுவ உயரதிகாரியொருவர் நிலைமையை சுமுகமாக்கி மாணவர்கள் தமது பயணத்தைத் தொடர அனுமதித்தார்.

(த-5)

## ஐரோப்பிய ஒன்றியம் புலிகளை தடை செய்யவில்லை

### ஒன்றியத்தின் பா.உ. தெரிவிப்பு

(நியூயோர்க்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் விடுதலைப் புலிகள் ஒருபோதும் இடம் பெறவில்லை. அவ்வாறு அவர்கள் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இடம் பெற்றிருந்தால அவர்கள் எவ்வாறு பிரான்ஸ் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வார்கள். இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்ற உறுப்பினர் நிரஞ்சன் தேமாவித்தியா கேள்வி எழுப்பியுள்ளார்.

நியூயோர்க்கில் செய்தியாளர் ஒருவருக்கு அளித்த விஷேட பேட்டி ஒன்றிலேயே நிரஞ்சன் தேமாவித்தியா மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் விடுதலைப் புலிகள் இடம் பெற்றிருப்பார்களா

(10ம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் நாட்டு அமைச்சர் டிசம்பரில் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் டிசம்பர்மாதம் ஜேர்மன் நாட்டுப் பொருளாதார அமைச்சர் இலங்கை வரவுள்ளதாக ஜேர்மனியின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் திருமதி ஜாங் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் ஜேர்மனுக்கும் இடையிலான 50 ஆண்டுகால இராஜதந்திர உறவுகளை முன்னிட்டு வெளியிடப்பட்ட நூல் வெளியீட்டு விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இத்தகவலை அவர் வெளியிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

இலங்கையின் இனப்பிரச்சினையில் ஜேர்மன் அதிக கவனம்

(10ம் பக்கம் பார்க்க)

# புலிகள் தமது திட்டவரைபை சமர்ப்பித்த 10 தினங்களில் பேச்சுக்கள் தொடரும்

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(நமது நிருபர்)

**விடுதலைப் புலிகளின் சட்ட வல்லுநர்களினால் பரிஸில் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைதொடர்பான திட்டவரைபை தென் அயர்லாந்து, ரப்ளின் நகரில் சட்டவல்லுநர்கள் ஆராய்ந்து அரசிடம் சமர்ப்பித்த பத்துத் தினங்களுக்குள் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நேரடிப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகுமென அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.**

அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் வழமையான செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அம்மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது; வடக்குக் கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகசபை

(10ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்


### திருத்துதலும் ஒட்டுதலும்


மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகல கெமராவகைகள், எலெக்ரோனிக் பிளாஸ்கன் திருத்துதல்,சிறிய பிளாஸ்டிக் பாட்ஸ் ஒட்டுதலுக்கு. தொடர்பு:சு.நாராயணசாமி,இல.301, கஸ்தூரியார் வீதி(மேல்மாடி), கன்னாதிட்டிச்சந்திக்கு அருகில்.(7497)


# வாழ்வுரிமைக் கோரிக்கையை ஏற்க மறுத்தால் விளைவு விபரீதமானதாகவே அமையும்

## தமிழீழ மகளிர் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

எவ்வாறான அரசியல் தீர்வினை அரசு ஏற்றுக்கொண்டு அதனூடாக தமிழருக்கான தீர்வினை முனவைக்க முடியுமோ அவ்வாறான ஒரு அரசியல் திட்ட வரைபையே நாம் இப்பொழுது தயார் செய்துள்ளோம் என்று தமிழீழ மகளிர் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் தமிழ்விழி தெரிவித்துள்ளார்.



நேற்றைய தினம் யாழ்.உயர் தொழில் நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் 16வது ஆண்டு நினைவுதின நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய போதே தமிழ்விழி இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தமிழ், மக்களின் விடுதலைக்கான இப்போராட்டம் மக்களின் எண்ணப்படியே நகர்த்தப்படுகின்றது. தொடர்ச்சியான இடப்பெயர்வுகளாலும் உயிரழிவுகளாலும் சலித்துப் போயிருந்த எம் மக்கள் அமைதியை விரும்பியதால், நாம் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இணங்கினோம்.

இதையடுத்து, பேச்சுவார்த்தைகள நடந்தன. அப் பேச்சுவார்த்தைகளில பேசப்பட்ட விடயங்களை நடைமுறைப படுத்துவதுடன் போரினால் பாதிப்புற்ற வடக்கு-கிழக்கை புனரமைப்புச் செய்து நிர்வகிப்பதற்கு இடைக் கால நிர்வாக சபையை நாம் கோரினோம்.

இதனால் ஏற்பட்ட முரண்பாடுகளால் இன்று சமாதானப்பேச்சு ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இடைக்கால நிர்வாகத்தை நாம் கோரியது சமாதானத்தை குழப்புவதற்காக அல்ல. புலிகள் போர் வெறி கொண்டு ஆயுதம் ஏந்தியவர்கள அல்ல.

எமக்கும் சமாதானத்தின்பால் நம்பிக்கையும் எதிர்பார்ப்புகளும் உளளன.

சமாதானத்தினூடாக எம் மக்களுக்கு ஓர் சிறப்பான எதிர்காலம் உருவாகும் என்றால் எதனையும் விலை கொடுக்க தயங்க மாட்டோம்.

புலிகளின் இந்த உறுதிப்பாட்டினை சர்வதேசமே உணர்ந்து நிற்கின்றது விடுதலைப்புலிகளுடன் முரண்பாட்டை உருவாக்கி விட வேண்டும் என்பதற்காக அரசு செய்த சூழச்சியால் நிராயுதபாணிகளாக 28 பேராளிகளைஇழந்தும் நாம் பொறுமை காத்து வருகிறோம்.

கடந்த காலத்தில் நாம் ஏமாற்றப பட்ட வரலாறுகளை அடிப்படையாகக் கொண்டே இடைக்கால நிர்வாக சபையை கோரியுள்ளோம்.

அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட வரைபு பல குறைப்பாடுகளை உடையதாக காணப்பட்டதாலேயே எமது அரசியல் சட்டவல்லுநர்களுடன் துணை கொண்டு தற்போதைய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட விடயங்களுடன திட்டவரைபை தயாரித்து வருகின்றோம்.

அரசினால் எதை எதையெல்லாம் எமக்கு தரமுடியும் என்பதை நன்கு ஆராய்ந்து குறைந்த பட்சத் தீர்வுகளையே நாம் கேட்டு நிற்கிறோம்.

இவ்வாறு சீர்திருத்தங்களுடன் வழங்கப்படும் எமது திட்டவரைபு குறித்த அரசாங்கத்தின் பதிலைப் பொறுத்தே எமது அடுத்த கட்ட நகர்வுகள் அமையவுள்ளன.

நாம் எமது அடிப்படை வாழ்வுரிமையையே கேட்டு நிற்கின்றோம் என்பதை சர்வதேசமே உணர்ந்துள்ள இந்த நிலையில் இலங்கை அரசும் இதனை உணர்ந்து செயற்படுமானால நாட்டிற்கு சிறப்பானதோர் எதிர்காலம உண்டு.

எமது வாழ்வுரிமைக் கோரிக்கை நிராகரிக்கப்படும் போது அடுத்து ஏறபடும் விளைவு விபரீதமானதாகவே இருக்கும் என்றார். (உ-4)

## வலுவிழந்த மாணவர் மரதனோட்டம்

(மருதங்கேணி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இயங்கிவரும் கிளி/ வள்ளிபுரம் இனிய வாழ்வு இல்லத்தின் 6ம் ஆண்டு நிறைவையொட்டி, அங்கு கல்வி பயிலும் வலுவிழந்த மாணவர்களுக்கிடையில் மரதன் ஓட்டப் போட்டி அண்மையில் நடத்தப்பட்டது. (உ-35)

## ஆறுதிருமுருகன் அமெரிக்கா செல்கிறார்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள இலங்கைத் தமிழர் சங்கத்தின் அழைப்பின் பேரில் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் இன்று அமெரிக்கா செல்கிறார்.

இரண்டு வார காலம் அங்கு தங்கியிருக்கும் அவர் இலக்கியச் சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளார்.

இதேவேளை, சிக்காகோ தமிழ் சங்கத்தின் ஆதரவுடன் நடைபெறவுள்ள நிகழ்வொன்றிலும் அவர் சொற்பொழிவாற்றவுள்ளார். (-5)

## சமுர்த்தி அமைச்சர் கருணாவைச் சந்திப்பார்

(கொழும்பு)

சமுர்த்தி விவசாய அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க, தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணச் சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மானை நாளை சனிக்கிழமை சந்தித்து பேசவுள்ளார்.

கரடியனாறு தேனகம் விடுதியில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில் கிழக்கு மாகாணத்தில் படையினரின் கட்டுப்பாடற்ற பகுதிகளில் சமுர்த்தித் திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்தல பற்றி ஆராயப்படவுள்ளது.(த-63,10)


### யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

### ஆதனவரி அறிவித்தல் - 2003

2003ம் ஆண்டு மூன்றாம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 30.09.2003ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமுமின்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விபரப்படி வெலியாற்றுப் பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகிறேன்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் -15%
ஏனைய காணிகள் -20%

நிலுவை உட்பட 2003ம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகர சபையின் கட்டளைச் சட்டம், அத்தியாயம் 252, பிரிவு 252ன் படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்.

காசோலையாக செலுத்துவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம். [c/6711]



### வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு)

### பதவி வெற்றிடம்

### பொதுமுகாமையாளர் பதவி 101/06

மேற்குறிப்பிட்ட பதவிக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தையும், மேலதிக விபரத்தையும் கொத்தணியின் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

01. தகைமைகள்:- கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் (108/81) சுற்று நிருபப்படி)

அ. கூட்டுறவுப் பணியாளரின் 05 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 6-வது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் 8 வருடம் குறையாத முகாமை மட்டத்திலான பதவியில் அனுபவமும் இதில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர (உயர்தரம்) க.பொ.த.(உயர்தரம்) மூன்று பாடங்களிலான சித்தியுடன் 10 வருடத்திற்குக் குறையாத முகாமை மட்டத்திலான பதவி ஒன்றில் அனுபவமும், இதில் வர்த்தகம்/ கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

02. வயதெல்லை:-
25 - 45 வரை (கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிபவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது) அத்துடன், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தமது விண்ணப்பத்தைத் தாம் கடமை புரியும் நிறுவனம் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.


03. சம்பளத்திட்டம்:-
6000 - 9000 / 140X10 - 160X10 — கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் (31/99 சுற்று நிருபப்படி)

04. பிணை:-
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப் பிரமாணத்திற்கமையவும், நெறியாளர்குழுத் தீர்மானத்திற்கமையவும் செலுத்தப்படல் வேண்டும்.

05. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 07.10.2003 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாகத் தலைவர், வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்,
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய். [C/6713]





யாழ். உஸ்மானியாக் கல்லூரியின் மீள் திறப்பு விழா நேற்று அதிபர் எம். எஸ். ஏ.எம். முபாறக் தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட யாழ். வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் என். வரதராசா, யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன, அதிபர் முபாறாக், மௌலவி பீ.ஏ.எஸ். சுபியான் ஆகியோரை முதலாவது படத்திலும், கற்றல் செயற்பாட்டில் மாணவர்கள் ஈடுபட்டிருப்பதை இரண்டாவது படத்திலும், தமிழீழ கல்விக்கழக யாழ்.மாவட்டப்பொறுப்பாளர் கவியன்பன் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் காணலாம் (படங்கள்:ஜெ.ஜெராட்)


# தியாக தீபம் திலீபனின் 16-வது ஆண்டு நினைவுகளில்...



"தேசத்தின் விடுதலைக்காய்
தேகத்தை ஆகுதியாக்கிய
வேங்கையின் மைந்தனே-நின்
வேட்கை நிச்சயம் நிஜமாகும்"

# ஈராக்கிற்குப் படைகளை அனுப்புவதற்கு வாஜ்பாய் - புஷ்ஷிடம் நேரடியாக மறுப்பு

## நியூயோர்க்கில் இரு தலைவர்களும் கூடி உலக விவகாரங்கள் பற்றி ஆராய்வு



(நியூயோர்க்)

**அமெரிக்காவின் அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷும் இந்திய பிரதம மந்திரி அட்டல் பிஹாரி வாஜ்பாயும் நேற்று சந்தித்து உலக விவகாரங் கள் பற்றி ஆராய்ந்துள்ளனர்.**

**பாகிஸ்தானுடனான பிரச்சினைகளில் இந்தியா எடுத்துள்ள முன் முயற்சிகளை அமெரிக்க அதிபர் பாராட்டியுள்ளார். அத்துடன், வாஜ பாய அமைதியை விரும்பும் மனிதர் என்றும் புஷ் புகழ்ந்துரைத்தார்.**

ஈராக்கிற்கு இந்திய படைகளை அனுப்புவது சாத்தியம் இல்லை என்பதையும், ஈராக்கில் பன்நாட்டு படைகளை நிலை நிறுத்துவதற்கு ஐ.நா. தீர்மானம் நிறைவேற்ற வேண்டியிருப்பதையும் வாஜ்பாய் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவின் கோரிக்கைக்கமைய ஈராக்கிற்கு பாகிஸ்தானும் தன் படைகளை அனுப்பமறுத்துவிட்டதாக செய்திகள் கூறுகின்றன.

ஈராக்விடயம் உட்பட,பலதரப்பு விடயங்கள் குறித்து இருதலைவர்களும் ஆராய்ந்தனர்.

நியுயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 56 வது சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள அட்டல் பிஹாரி வாஜ்பாயுடன் பகல் விருந்தொன்றின் போது அதிபர் புஷ் இப்பேச்சுக்களை நடத்தினார்.

ஈராக்கின் நிலைமையை ஸ்திரப்படுத்த இந்தியப்படைகளை அங்கு (ஈராக்கிற்கு) அனுப்புவது குறித்து புஷ் கேள்வியெழுப்பினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் ஐ.நா.தீர்மானித்தால்மட்டுமே இந்தியா படைகளை அனுப்பமுடியும் என்று வாஜ்பாய் கூறியதாகக் கூறப்படுகின்றது.

பாகிஸ்தானின் எல்லை கடந்த பயங்கரவாதம் இன்னும் நிறுத்தப்படவில்லை என்ற வாஜ்பாயின் கவலை தொனித்த கருத்திற்கு, பாகிஸ்தானின் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இந்தியா எடுத்துவரும் முன் முயற்சிகளை பாராட்டிய அதிபர் புஷ் வாஜ்பாய் ஒரு சமாதான தூதுவர் எனவும் புகழ்ந்துள்ளார்.

ஆக்கப்பணிகளுக்காக அணுசக்தித் துறையிலும், உயர் தொழில் நுட்பத் துறையிலும் ஒத்துழைப்பை மீண்டும் இந்தியாவுடன் அமெரிக்கா ஏற்படுத்த வேண்டுமென வாஜ்பாய் கேட்டுக்கொண்டுள்ளார்.

1974ஆம் ஆண்டு இந்தியா முதன் முறையாக அணுகுண்டுச் சோதனை நடத்திய பின்னர் அமெரிக்காவின் இந்தியாவிற்கான ஒத்துழைப்புகள் நிறுத்தப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.


ஆப்கானிஸ்தான்,ஈராக்,சீனா, தெற்காசியா,ஈரான் மற்றும் மேற்காசிய நாடுகள்உட்பட பல விடயங்கள் குறித்தும் இவர்கள் இருவரும் ஆராய்நதுள்ளனர்.

இந்த கூட்டத்திற்கு புஷ் நிர்வாகம் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது.அமெரிக்கத் தரப்பிலிருந்து பாதுகாப்பு அமைச்சர் கொலின்பவல, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொன்ரலீசாரைஸ்,ஐ.நா.விற்கான அமெரிக்கத் தூதுவர் ஜோன் நெகிரோப்பான்ற் மற்றும் வெளியுறவு அமைச்சக மூத்த அதிகாரிகளும், அதிபர் மாளிகை அதிபர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**படைகள் அனுப்ப பாகிஸ்தானும் மறுப்பு**

அமெரிக்காவிற்கு உதவும் வகையில் ஈராக்கிற்கு இராணுவத்தை அனுப்புவதை பாகிஸ்தான் மக்கள் முற்றாக வெறுப்பதாக ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி யோர்ச். டபிள்யு புஷ்ஷை சந்தித்த போதே அவர் இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளார்.



தற்போதுதளள நிலைக்கு ஏற்ப ஈராக்கிற்குப் படைகளை அனுப்புவதை பாகிஸ்தான் மக்கள் முற்றாக எதிர்ப்பதாக முஷாரப் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை ஈராக செல்லும் முஸலிம நாட்டுப் படைகளின் பாதுகாப்புக் குறித்து உறுதியளிக்க வேண்டும் என்று நேற்று முன்தினம் காலை புஷ்ஷை சந்தித்த போது முஷாரப் நிபந்தனையும் விதித்துள்ளார். (பி-2)

உலக தரிசனம்

## முப்பெரும் மனைவியர்



ஐ.நா. தலைமையகத்துக்கு செவ்வாய்க்கிழமை வந்த ஐ.நா. தலைமைச் செயலாளர் கோபி அனானின் மனைவி நானி (இடது), அமெரிக்க அதிபரின் மனைவி லாரா புஷ் (நடுவில்), ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதர் ஜான் நீக்ரோபான்ட்டியின் மனைவி டயானா வில்லியர்ஸ்.

## குழந்தைகள் தலையாடும் புதுவிதநோய் சூடான் நாட்டில் வேகமாகப் பரவுகிறது

(கார்டூம்)

இனங்காணப்படாத நோய் ஒன்றினால் நூற்றுக்கணக்கான சூடானிய சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நோய்க்கான காரணியையும்,சிகிச்சை முறையையும் கண்டு பிடிக்கும் தீவிர முயற்சியீல் வைத்தியர்கள் ஈடுபட்டு இருக்கின்றனர்.

தென் சூடானில் பரவிவரும் இனம் காணப்படாத இந்நோய் 10 வயதான சிறுவர்களையே கூடிய அளவில் தாக்கிவருகின்றது.

இதனால் பீடிக்கப்பட்டவர்கள் தலையாட்டம் கொள்வ்தாகவும், உணவு உட்கொள்ளும் போது இந்த நிலை மேலும் மோசமடைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நோய் நரம்புகளுடன் சம் மந்தப்பட்டதாக இருக்கலாம் என 'யுனிசெவ்' நிறுவனத்துடன் தொடர்புடைய அமெரிக்க வைத்தியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நோய்க்கான சரியான காரணம் மருத்துவர்களால் உறுதிப்படுத்தப்படவில்லை.

இதுவரை 300 இற்கும் மேற்பட்ட சிறுவர்களை இந் நோய் தாக்கியுள்ளது.

தென் சூடானில் நிலவும் சுகாதார நிலமைகளும்,அடிப்படை வசதிகளின்மையும் இந்த நோய்க்கு காரணமாக இருக்கலாமென நம்பப்படுகின்றது. (பி-9,2)

## போதைப்பொருள் கடத்தியவரின் தலை துண்டிக்கப்பட்டது

(ரியாத்)

சவூதி அரேபியாவில் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட பாகிஸ்தானியரின் தலை புதன்கிழமை துண்டிக்கப்பட்டது.

பாகிஸ்தானைச் சேர்ந்த தஹெர்ஷா அரப் கான்,சவூதி அரேபியாவுக்கு ஹெராயின் போதைப் பொருளை கடத்தி வந்தபோது பிடிபட்டார். பின்னர் அவர் வைத்திருந்த பாஸ்போர்ட் போலியானது எனத் தெரியவந்தது.


போதைப் பொருள் கடத்தலை ஒப்புக்கொண்ட அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.அதன்படி ஜெட்டா நகரில் பொது இடத்தில் அவருடைய தலை துண்டிக்கப்பட்டது.

அதேபோல ஆப்கான் நாட்டைச் சேர்ந்த கான் பார்டல் என்பவரும் ஜெட்டாவில் தூக்கிலிடப்பட்டார்.

சவூதி அரேபியாவில் இஸ்லாமியச் சட்டம் மிகத் தீவிரமாகத் கடைப்பிடிக்கப்படுகிறது அதன்படி கொலை, பலாத்காரம், ஆயுதக்கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவோருக்கு அதிகபட்சமாக மரணதண்டனை விதிக்கப்படுகிறது.

கடந்த 2002ஆம் ஆண்டில் இதே போன்று 48பேருக்கு மரணதண்டனை அளிக்கப்பட்டுள்ளது. (பி)

## பா.ஜ.க. தலைவர் வெங்கைய நாயுடு உயிர் தப்பினார்



எயார் டெக்கான் நிறுவனத்தின் ஹைதராபாத் விஜயபாடா விமானசேவை தொடக்க நாளான கடந்த புதன்கிழமை மத்திய அமைச்சர் ராஜீவ் பிரதாப் ரூடி, பா.ஜ.க. தலைவர் வெங்கைய நாயுடு, தெலுங்கு தேசக் கட்சித் தலைவர் யெர்ரன் நாயுடு உட்பட 33 பேருடன் புறப்பட்டுக்கொண்டிருந்த விமானத்தின் இடதுபுற எஞ்சின் பெரும் புகையைக் கக்கிக்கொண்டு தீப்பற்றிக் கொண்டது. அதிர்ஷ்டவசமாக அதிலிருந்த அனைவரும் உயிர் தப்பினர். தீப்பிடித்த சமயம் விமானம் புகையில் மூழ்கியதையே இங்கு காண்கின்றீர்கள்.

## அமெரிக்காவில் விஸா கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன

(வாஷிங்டன்)

கடுமையான கட்டுப்பாடுகளின் கீழ் விஸா வழங்கும் திட்டத்தை ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

இத் திட்டத்தின் கீழ்27 நாடுகள் அடங்குகின்றன என்றும் அடுத்த மாதம் முதல் இதுநடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளனது.

அமெரிக்காவின் இத் தீர்மானத்தை, மேற்குறிப்பிட்ட 27 நாடுகளில் 21 நாடுகள் மீள் பரிசீலணை செய்யுமாறு அமெரிக்காவை கோரியிருந்தன.

அதற்கேற்ப மீள் பரிசீலணை மேற கொள்ள அமெரிக்கா உத்தேசிததுள்ளது. (பி-2)

## தமிழ் நாடு அரச ஊழியர் பிரச்சினை

## தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது

(புதுடில்லி)

தமிழக அரசு ஊழியர் வேலை நிறுத்தம் தொடர்பாக அளித்த தீர்ப்பை மறு ஆய்வு செய்ய உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தமிழக அரசு ஊழியர்கள் சுமார் 1லட்சத்து 70ஆயிரம் பேர் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இது தொடர்பான வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம்,அரச ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட அடிப்படை தார்மீக மற்றும் சட்ட ரீதியில் உரிமை இல்லை என்று கடந்த ஆகஸ்ட் 6 ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இத்தீர்ப்பை மறு பரிசீலனை செய்யக்கோரி கேரள அரசு ஊழியர்களை உறுப்பினர்களாகக் கொண்ட என்.ஜி.ஓ.சங்கம் இம் மாத ஆரம்பத்தில் மனுத்தாக்கல் செய்தது.

கூட்டுப்பேரம் தோல்வியடையும் நேரத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்துக்கு தள்ளப்படுகின்றனர். தற்போது பல்வேறு மாநில அரசுகள் தொழிலாளர் விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கின்றன.

தமிழக அரசு ஊழியர்பணி விதிமுறைகளை மட்டுமே கருத்தில் கொண்டு இத்தீர்ப்புவழங்கப்பட்டுள் ளது. இதனால் நாடு முழுவதும் உள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் எனவே தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அச்சங்கம் கோரியது.

ஓய்வுபெற்ற நீதிபதி எம்.பி.ஷா. மற்றும் நீதிபதி ஏ.ஆர்.லட்சுமணன் ஆகியோர் கொண்ட பெஞ்ச் இக் கோரிக்கையை எற்க மறுத்து விட்டது.மறுவாய்வு மனுத்தாக்கல் செய்ய அனுமதிக்க முடியாது என்று கூறி நிராகரித்துவிட்டது.

இதன் மூலம், அரசு ஊழியர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது சட்டப்படி குற்றம் என்ற தீர்ப்பு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (பி)

# செய்தித் துளிகள்

## ஆசிரியர்தின கலந்துரையாடல்

(கந்தரோடை)

உலக ஆசிரியர் தினம் குறித்து சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழைக் கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

இந்த வகையில், சங்கானை, சண்டிலிப்பாய்க் கோட்டங்களுக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும், உடுவில், தெல்லிப்பழைக் கோட்டங்களுக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன. (உ-103)

## வீட்டுடன் இணைந்த கடைகளுக்கு கடன் வசதி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வீட்டுடன் இணைந்த கடைகளுக்கு சமுர்த்தி வங்கியூடாக கடன வசதிகள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களால் ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டு கிராம சேவையாளர் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட 4 பேருக்கே இக்கடன் உதவிகள் கிடைக்கவுள்ளன.

ஜே/259 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள திருமதி பாக்கியராஜா - பகவதியம்மா, ஜே/277 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள திருமதி ந.தவராசா, ஜே/273 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பி.குணசிங்கம்,ஜே/278 கிராமசேவையாளர் பிரிவிலுள்ள எஸ். சிவகுமார் ஆகியோரே இக்கடன் உதவிகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

மேற்படி நால்வருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா கடனுதவி விரைவில் வழங்கப்படவுள்ளது. (உ-233)

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில், தும்பளையில் அமைந்துள்ள இலட்சுமணந்தோட்ட நலன்புரி நிலையத்தில் இன்று சிரமதானப் பணி இடம்பெறவுள்ளது.

இதேவேளை, 27 குடும்பங்கள் தங்கியுள்ள இம்முகாமில் வாழ்பவர்களுக்குத் தினமும் பால் வழங்கும் பணியை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் மேற்கொண்டு வருகின்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

## தலைமைத்துவ பயிற்சிநெறி

(மருதங்கேணி)

கண்டாவளைப் பிரதேசத்தில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட குடும்பப் பெண்களுக்கு சமூக, பொருளாதாரப் பொறுப்புக்களை கையளித்தல் தொடர்பான தல்லமைத்துவத் திறனாய்வுப் பயிற்சி நெறியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உ-35)

## பாலம் சேதம்

(மருதங்கேணி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி - துணுக்காய் பிரதான வீதியில் அமைந்துள்ள கொத்தம்பியா குளப்பாலம் திடீரென உடைந்ததையடுத்து, அவ்வீதியூடாகப் பிரயாணம் செய்வதில் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

மீளவும் பாலத்தைப் புனரமைப்பதில் தற்போது உள்ள இடைஞ்சல்கள் காரணமாகத் தற்காலிகமாகப் புதிய பாதை போடப்பட்டு அதனூடாகப் பயணிகள் பிரயாணம் மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகின்றது. (உ-35)

## திறப்புவிழா

(மருதங்கேணி)

புதிதாக அமைக்கப்பட்டுள்ள கிளிநொச்சி உதயநகர் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகத்தால் கடந்த திங்களன்று வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது. (உ-35)

## இறக்குமதித் தீர்வை குறைப்பு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இரு வாசனைத் திரவியங்களின் இறக்குமதித் தீர்வைகளைக் குறைப்பதற்கு இந்தியா முன்வந்துள்ளது.

கராம்பு, மிளகு என்பனவற்றின் இறக்குமதித் தீர்வைகளே குறைக்கப்படவுள்ளன.

இதற்கமைய கராம்பின் இறக்குமதித் தீர்வையை 75 சதவீதத்தாலும், மிளகின் இறக்குமதித் தீர்வையை முற்றாக நீக்குவதற்கும் இந்தியா இணங்கியுள்ளது. (தி-60)

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கையை மீளவும் மலரச் செய்வோம் என்ற திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

தேசிய வளங்களையும் மனித உரிமைகளையும் பாதுகாக்கும் அமைப்பு ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

இதேவேளை, இலங்கையை மீளவும் மலரச் செய்வோம் என்ற திட்டத்திற்கு எதிராக 10 இலட்சம் கையொப்பங்களைத் திரட்டும் பணியும் நேற்று முன்தினம் புறக்கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (த)

## சிகை ஒப்பனை நிலையங்களும் இன்று பூட்டு

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 16வது நினைவு நிறைவு தினமான இன்று நல்லூரில் நடைபெறவிருக்கும் அடையாள உண்ணாவிரதம் மற்றும் அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்க உறுப்பினர்களுக்கு, யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இன்று முழுமையாக கதவடைப்புச் செய்து அவ்வப் பகுதி கேந்திர இடங்களில் ஒன்று திரளும் உறுப்பினர்களை வாகனங்களில் அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி)

## பாராளுமன்றில் சட்டமூலம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இந்திய வம்சாவழித் தமிழர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்கும் சட்டமூலம் கடந்த செவ்வாயன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இச்சட்டமூலத்தைச் சமாபபித்தார். இச்சட்டமூலம் நிறைவேற்றப்படும் பட்சத்தில், 1964ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இலங்கையில் நிரந்தரமாக வாழ்நது வருகின்ற இந்தியக் கடவுச்சீட்டை அல்லது அதனை ஒத்த ஆவணங்களை வைத்திருக்கும் அனைவருக்கும் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படும் என உள்துறை அமைச்சர் தெரிவித்தார். (தி-60)

## புனரமைப்பு

(மருதங்கேணி)

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் நிதி அனுசரணையுடனும், சேவாலங்கா மன்றம் மற்றும் முல்லைப் பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடனும் கிளி.முறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

சிரமதான அடிப்படையில் பாடசாலை வளாகம் மற்றும் மைதானம் ஆகியன துப்புரவு செய்யப்படுவதுடன், யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் நிதியுதவியுடன் உடைந்த தளபாடங்கள் மீளவும் திருத்தி சீர்செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன், மேற்படி பிரதேசத்தில் பொது மண்டபம் மற்றும் பொது மலசல கூடம் உள்ளிட்ட வருமான ஊக்குவிப்பு நிதியுதவிகள் போன்றவற்றைச் சேவா லங்கா மன்றம் செய்யவுள்ளதாக மன்றத்தின் திட்ட இணைப்பாளர் செ.சிவகுருநாதன் தெரிவித்துள்ளார். (உ-35)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலையில் நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு நவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் விசேட பூசை, கூட்டு வழிபாடு, மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளன. (உ)

## மாந்தை மேற்கில் 1894 மிதிவெடிகள் அகற்றப்பட்டன

(மருதங்கேணி)

மாந்தை மேற்குப் பகுதியில் சுவிற்சர்லாந்து நாட்டின் கண்ணிவெடி அகற்றும் பிரிவு மற்றும் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு ஆகியன இணைந்து சுமார் ஆயிரத்து 894 கண்ணிவெடிகளை அகற்றியுள்ளன.

மன்னார்ப் பிரதேச செயலர் பிரிவில் 11 ஆயிரத்து 238 சதுரமீற்றர் பரப்பளவிலும், மடு மற்றும் பாப்பாமோட்டைப் பகுதிகளில் 42 ஆயிரத்து 454 சதுரமீற்றர் பரப்பளவிலும் இவ்விரு பிரிவினரும் இணைந்து மேற்படி தொகை கண்ணவெடிகளை அகற்றியுள்ளமை புள்ளி விபரங்கள் மூலம் தெரியவருகின்றது. (உ-35)

## மருதங்கேணி ஆஸ்பத்திரி புனரமைப்பு

(மருதங்கேணி)

கடந்த காலத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தரைமட்டமான நிலையில் உள்ள மருதங்கேணிக் கிராமிய வைத்தியசாலை தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் 160 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் நிக்கொட் அமைப்பினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள 3 ஆயிரம் குடும்பங்களும் வைத்திய சேவையைப் பெற்றுக்கொள்வதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

## பிரதான மண்டபம் அமைப்பு

(கந்தரோடை)

சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில், ஜி.ரி.சற் நிறுவனம் மேற்படி பாடசாலையில் பிரதான மண்டபம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

அத்துடன், 51 கதிரைகளையும் இப்பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (உ-103)

## மீள் குடியமர்வுக் கொடுப்பனவு

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள 108 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்வுக் கொடுப்பனவாக தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

விநாயகபுரம் கிராமத்தில் உள்ள 34 குடும்பங்களுக்கும், கிருஷ்ணபுரம் கிராமத்தில் உள்ள 74 குடும்பங்களுக்கும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கி ஊடாக இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. (உ-35)

## நினைவஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அமரத்துவம் அடைந்த கல்வியியற்துறைப் பேராசிரியர் எஸ்.முத்துலிங்கம், விலங்கியற்துறைப் பேராசிரியர் கே.டி. அருட்பிரகாசம் ஆகியோரது நினைவஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறை மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற் கழகத் தலைவர் க.முருகவேல் தலைமையில் நடைநடைபெறவுள்ளது.

நினைவஞ்சலி உரைகளை யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ் மற்றும் பேராசிரியர்களான வ.ஆறுமுகம், க.சின்னத்தம்பி, சபா. ஜெயராசா ஆகியோரும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, யாழ். வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி சு.சுப்பிரமணியம் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (உ)

## நவராத்திரி பாமாலை

### முதலாம் நாள்



### துர்க்கையே எங்களுக்குத் துணை

திக்கெட்டும் உந்தன் ஆட்சி நிலவட்டும்
தேசமெங்கும் துட்டர்செயல் ஒழியட்டும்
முக்கனிகள் படைத்துன்னை வேண்டுகிறேன்
முடிவு நன்றே எங்களுக்கு அமையட்டும்
வெக்கப்படும் செயல்களிங்கு அகலட்டும்
விடிவு ஈழத்தமிழருக்கு சேரட்டும்
துர்க்கையம்மா இத்தனையும் கிடைக்கட்டும்
துணிவு எமக்கிங்கு முதலில் பெருகட்டும்

செல்வி ரம்யா உதயகுமார்
*யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம*

### பாரம் குறைப்பவளே

வீரத்திற்கு அதிபதியே - கொடும்
வினைகள் தீர்ப்பவளே
பாரத்தைக் குறைப்பவளே - உன்
பாதத்தைப் பணிகின்றோம்

க.ஆனந்த்
*யாழ். வண். நாவலர் ம.வி.*



கந்தரோடை ஸ்ரீசுப்பிரமணிய வாசிகசாலை முன்பள்ளி விளையாட்டு விழாவில் சிறப்பு விருத்தினராகக் கலந்து கொண்ட கந்தரோடைக் கிராமசேவை அலுவலர் க.திருநாவுக்கரசு மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம்.

# பாரத தேசத்திற்கு பாடம் புகட்டிய வீர மறத்தமிழன் தியாகி திலீபன்

“வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்பு வேறொன்று கொள்வாரோ” என்ற பாரதி பாடலுக்கு இலக்கணமாக விளங்கி அழியாப் புகழ் பெற்றவன் தியாகி திலீபன்.



“நான் திலீபனை மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாகத் திலீபன் தன்னை அழித்துக் கொண்டான்”

நல்லைக் கந்தன் வடகிழக்கு வீதி முனையில் 265 மணித்தியாலங்கள் நீராகாரம் எதுவுமின்றி தமிழனின் விடிவிற்காகத். தன்னையே அர்ப்பணித்து தியாகத்தீபமாக ஒளிவிட்டு பிரகாசிக்கும் திலீபனின் தியாகம் போற்றத்தக்கதே.

திலீபனின் தியாகமோ வித்தியாசமானது, வியக்கத்தக்கது, எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டத்தில் தன்னைப் பலி கொடுத்த, ஈடுஇணையற்ற ஒரு மகத்தான தியாகத்தைத் திலீபன் புரிந்தான்.


அவனது மரணம் ஒரு வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி, தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிய நிகழ்ச்சி,பாரதநாட்டைத் தலை குனியவைத்த நிகழ்ச்சி,உலகத்தின் மனச்சாட்சியைச் சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் சமாதான முயற்சிகள் என்ற போர்வையில் இருநாட்டு அரசுகளின் நலன்கள் மட்டும் கருத்தில் கொள்ளப்பட்டு காய்கள் நகர்த்தப்

## மறவன்

பட்ட வேளை ஈழத்தமிழரின் எழுச்சி வடிவாக சாத்வீகப் போராட்டத்தில் குதித்தான் திலீபன்.

தற்போதைய சூழலிலும் சமாதான முயற்சிகள் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு அப்பால் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினதும், சர்வதேச சமூகத்தினதும், வர்க்க நலன்களை மட்டும் கருத்தில் கொண்டு நகர்த்தப்படும் சூழ்நிலையில் ஈழத் தமிழ் மக்கள் தியாகதீபம் திலீபனை, அவரது போராட்டத்தை நினைவுகூருகின்றனர்.



“ஈழத்தமிழ் மக்களின் எழுச்சி எப்போதெல்லாம் குமுறி எழுவதற்கு அறிகுறிகள் தென்பட ஆரம்பிக்கின்றதோ அப்போதெல்லாம் எதிரி அவற்றை அடக்கி ஆள்வதற்காக ஒப்பந்தங்களுடன் வருகிறான்”

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் மட்டுமல்ல சாத்வீகப் போராட்டத்திலும் உறுதியானவர்கள் என்பதை தலைவர் வழியில் தியாகி திலீபன் நிரூபித்தான்.

1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.55 மணிக்கு அப்போது யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த லெப்டினன் கேணல் திலீபன் நீராகாரம் இன்றி தனது போராட்டத்தை ஆரம்பித்தபோது, காந்தி தேச அரசாங்கம் அதனை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. ஏளனமாகக் கையாண்டது என்பது அப்போது பலரும் அறிந்த உண்மை.

* மீளக் குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் - கிழக்கிலும் புதிதாகத் திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

* சிறைக் கூடங்களிலும், இராணுவப் பொலிஸ் தடுப்பு முகாம்களிலும தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

* அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

* ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும் முற்றாகக் களையப்பட வேண்டும்.

* தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும். முதலிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து திலீபன் தனது உண்ணா விரதத்தை ஆரம்பித்தான்.

இந்தியப் படையினர் நிலைகொண்டிருந்தவேளை, போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்த புலிகள் போராட்ட வடிவத்தை மாற்றி தமிழர் இலட்சியததை வலியுறுத்த திலீபனால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்திற்கு அப்போது வடக்கு - கிழக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களிலும் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளும், எழுச்சி ஊர்வலங்களும் நடத்தப்பட்டன.



அன்றைய சூழலில் இவ்வாறு உண்ணாவிரதம் இருப்பதற்கு விடுதலைப் புலி உறுப்பினர்கள் பலர் முன் வந்தனர். ஆனால், தேசியத் தலைவர் வே.பிரபாகரனோ இந்தப் பாக்கியத்தை லெப். கேணல் தியாகி திலீபன் ஒருவனுக்கே தந்தார். ஏனெனில், சாகும் வரை நீராகாரம் இன்றி உண்ணா நோன்பு இருக்க வேண்டும் என்பதில் தளராத உறுதி மிக்கவனாக திலீபன் இருந்தான்.




இந்திய வல்லாதிக்கத்தின் முகத் திரையைக் கிழிப்பதில் பெரும் அவாக் கொண்டிருந்தான என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தியாவை எதிர்க்கத் திலீபன தூக்கிய அஹிம்சை ஆயுதம், இந்திய வரலாற்றைத் திருத்தியமைக்க வேண்டிய தேவை உலகிற்கு ஏற்பட்டது என்பது சாதாரண விடயம் அல்ல. இந்திய - இலங்கை அரசுகள் முன் திலீபன் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தான். இவனது கோரிக்கைகள் மீது இந்திய அரசு உருப்படியான நடவடிக்கை எடுத்திருந்தால், திலீபன் ஒருவேளை உயிரிழக்காமல் இருந்திருக்கலாம்.

இததனையும் நடந்து 16 வருடங்கள் கழிந்துவிட்டன. தனது நாட்டையும், நாட்டு மக்களையும் சிந்தித்துத் தன்னைத் தானே தியாகம் செய்து மறைந்த தியாகி திலீபனின் மறைவுக்கு இந்திய அரசாங்கமும் பொறுப்பேற்றே ஆகவேண்டும்.

இனப்பிரச்சினை சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தப்படி பேச்சுவார்த்தையில் எனக்கு நம்பிக்கையில்லை. இதனை எங்கள் நாட்டு மக்களுக்கும் உங்கள் நாட்டு மக்களுக்கும் எடுத்துக் கூறுங்கள் என்று திலீபன் இறுதியாகத தமிழ்நாடு காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் பழ நெடுமாறனிடம் வேண்டுகோள் விடுத்தான்.

தினமும் காந்திக்கு அஞ்சலி செலுத்தியும், அஹிம்சையே தனது கொள்கையென உலகம் முழுவதும் பறைசாற்றிய நாடு இந்தியா. திலீபனின் மரணம் இந்தியாவிற்கு தலை குனிவை ஏற்படுத்தியுள்ளது.

திலீபன் என்ற இயக்கப் பேரைக் கொண்ட பார்த்தீபன்,யாழ். ஊரெழுவைச் சேர்ந்த இராசையா ஆசிரியரின் புதல்வன் ஆவான். இளவயதில் தாயை இழந்த அவன் தந்தையின் அரவணைப்பில் வளர்ந்து, ஊரெழு அரசினர் பாடசாலையில் ஆரம்பக் கல்வி பயின்றார்.

இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆரம்பித்த அவன், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் சித்தியடைந்து மருத்துவ பீடத்திற்குத் தெரிவானான். எனினும், 1983 கறுப்பு யூலையைத் தொடர்ந்து மருத்துவ பீட உயர்கல்வியைத் துறந்து தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் போராளியாகத் தன்னை இணைத்துக் கொண்டான்.

யாழ். இந்துக் கல்லூரி உயர் வகுப்பு மாணவனாக இருந்த வேளையில் புலிகளின் மூத்த உறுப்பினர் பொன்னம்மான், ராதா போன்றவர்களின் நட்பு அவனுக்கு அனுபவ அறிவுகளை ஊட்டியதன் பின்னணியே மருத்துவபீட உயர்கல்வியை திலீபன் துச்சமாக மதிக்கத் தூண்டியது எனலாம்.

புலிகள் அமைப்பில் இணைந்த பார்த்தீபன், திலீபன் எனப் பெயர் மாற்றம் பெற்று, போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டு நிறைவுசெய்த பின்னர், வலிகாமப் பிரதேசத்தில் அரசியல் பணிகளில் ஈடுபட்டான். அவனது ஆற்றல், அர்ப்பணிப்புக் காரணமாக 1985 ஆம் ஆண்டு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராகக் கடமை புரிந்தான்.

எனினும், அவ்வேளை படையினர் பல்வேறு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது, இடம் பெற்ற முறியடிப்புச் சமரின்போது திலீபன வயிற்றில் விழுப்புண் அடைந்தான்.

இதனால், அவனது சிறு குடலின் ஒரு பகுதி சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்ட போதும், புத்துயிர் பெற்று மீண்டும் அரசியல் பணிகளில் ஈடுபட்டான்.

இனவாதிகளும், ஸ்ரீ லங்கா அரசாங்கமும் திலீப்னின் தியாகத்தைக் கொச்சைப்படுத்தும் பிரசாரங்களை இன்றும் மேற்கொண்டு வருகின்ற நிலையிலும் தமிழ்மக்கள் அதனைப் புறந்தள்ளி அவனை உணர்வுபூர்வமாக நினைவுகூர்ந்து வருகின்றனர்.

சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் யாழ். கோட்டைக்கு முன்பாக இடம் பெற்ற வைபவத்தில் உரையாற்றிய லெப்டினன் கேணல் திலீபன “ஈழத் தமிழ் மக்களின் தேசிய எழுச்சி எப்போதெல்லாம் குமுறி எழுவதற்கு அறிகுறிகள் தென்பட ஆரம்பிக்கின்றதோ அப்போதெல்லாம் எதிரி அவற்றை அடக்கி ஒடுக்குவதற்காக ஒபபந்தங்களுடன் வருகின்றான். இலங்கை - இந்திய ஒப்பந்தமும் அவ்வகையில் மக்களின் விடுதலைத் தாகத்தை அடக்கி ஒடுக்கும் ஒன்றே” என்றான்.

## இன்று ஒரு தகவல்

# அறிவு

அறிவு என்பது அனுபவ அறிவு, நூல் அறிவு ,தொழில் அறிவு எனப் பல உட்பிரிவுகளைக் கொண்தாகும். வாழ்க்கையில் நாம் தட்டுப்பட்டுத் தேடிப் பெறுகின்ற அறிவு என்பதனால் அனுபவ அறிவைப் பட்டறிவு என்றும் கூறுவார்கள். இவற்றினுள் நுண் அறிவு என்பது நமக்குப் பிறவியிலேயே தோன்றுவதாகும். இந்த நுண்ணறிவுகளை அடிப்படையாகக் கொண்டு நாம் எமது இடைவிடாத முயற்சிகளால் உருவாக்கிக் கொள்கின்ற மாடமாளிகைகள் தான் நூல் அறிவு, தொழில் அறிவு போன்றவை.

அனுபவ அறிவு என்பது முழுக்கமுழுக்க நாம் சார்ந்திருக்கின்ற, நாம் அன்றாடம் பழகுகின்ற, நொடி தோறும் புழங்குகின்ற இந்தச் சமுதாயம் எமக்கு வழங்குகின்ற நன்கொடையாகும் அனுபவ அறிவின் வன்மை மென்மைகளை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டால் போதும், இந்த சமுதாயத்தில் நாம் மதிக்கத்தக்க ஒருவராக உயர்ந்து விடுவோம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் வேதநாயகம் பிள்ளைக்கு ஒரு தனிப்பெருமை உண்டு. ஆம்! தமிழில் முதன்முதலாக நாவல் எழுதிய பெருமை அவருக்கே உண்டு. ''பிரதாப முதலியார் சரித்திரம்'' என்ற நாவலில் அவர் அறிவிலிக்கும், அறிவாளிக்கும் இடையில் உள்ள நுட்பமான, அதே சமயம் மிகமிக முக்கியமான வேற்றுமையை அழகாகக்கூறுகின்றார்.

அறிவிலியின் குறைகள் உலகமெலாம் தெரியும் அவனுக்கு மட்டும் தெரியாது. அறிவாளியின் குறைகள் அவனுக்கு மட்டும் தான் தெரியுமே தவிர அடுத்தவர்க்குத் தெரியாது என்கின்றார். உண்மைதானே! இன்றைய சமுதாயத்தின் இத்தகைய நிலையைத்தானே அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நீக்கமறப்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

அறிவு என்பது சுடர் ஏற்றி வைத்த மெழுகுவர்த்தி போன்றது. ஒரு சுடரில் இருந்து ஓராயிரம் சுடர்களை நாம் ஏற்றிக் கொள்ளலாம். ஆனால் செல்வம் என்பது இதற்கு நேர் எதிரானதாகும். ஓரிடம் தனிலே நிலையாக நில்லாதது உருண்டு உருண்டு செல்வதாகும். இதனால்த்தான் இதற்குச்செல்வம் என்று பெயர். தாம் எவரிடத்தில் இருக்கின்றோமோ அவரை மட்டும் செல்வனாக்கிப் பிறரை வறியவனாக்கி விடும் இயல்பினை உடையதாகும். இந்த உண்மையை ஓர் அறிஞர் பெருமகனார் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றார். ''அறிஞர்களுடன் உறவாடினால் நீயும் அறிஞன் ஆவாய் பணக்காரருடன் உறவாடினால் பணக்காரராக மாட்டாய்'' என்பதே அந்த அமுத மொழியாகும்.

புனிதர் பேசில் என்கின்ற சான்றோர் அறிவின் மேன்மையை ''அறிவால் உழைப்பவர் ஆளுகின்றனர் உடனார் உழைப்பவர் ஆளப்படுகின்றனா'' என்கின்றார். நாம் எப்போதும் நம்மைவிட மேலான அறிவை உடையவர்களிடம் மட்டுமே பழகவேண்டும். நட்புப் பாராட்ட வேண்டும். அறிஞர்களின் கூட்டத்தோடு நாம் பழகுவது என்பது சொர்க்கத்தில் வாழ்வதற்குச் சமமானது என்கிறது நாலடியார் என்கின்ற நற்றமிழ் இலக்கியம்.

இதே கருத்தை அரபு நாட்டுப் பழமொழி ஒன்று அறிஞர் கூட்டம் ஓர் உயிருள்ள வாசிகசாலை என்கின்றது. மற்றுமொரு அரபுப் பழமொழி அனுபவம் என்பது அறிவின் முகம் பார்க்கும் கண்ணாடி என்கிறது. நமது பெருமைக்குரிய வள்ளுவனார் அறிவின் உயர்ந்த தன்மையை விளக்க வருகையில் ''அறிவு அற்றம் காக்கும் கருவி செருவார்க்கும் உள் அழிக்கல் ஆகா அரண்'' என்கிறார். அதாவது அறிவு என்பது நமக்கு அழிவு வராமல் காக்கின்ற கருவியாகும். அன்றியும் பகை கொண்டு எதிர்ப்பவராலும் அழிக்கமுடியாத உள் அரணுமாகும் என்பதே இதன் பொருளாகும்.

ஆம்! நம்மீது பொறாமை கொண்டவர்கள் பகைவர்கள் முயன்றால் நமது மற்றைய செல்வங்களைச் சிதைத்து விடமுயும். ஆனால் நம்மிடமுள்ள அறிவுச் செல்வத்தை எவராலும் சிதைக்க முடியாது. எனவே மக்கள் அனைவரும் எங்கனமாயினும் முயன்று அறிவுச்செல்வத்தைப் பெற்றுவிடவேண்டும்.

அரிதோறும் அறியாமைகாண்கின்ற நிலை நம் ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டும். அதனால்த்தான் ''கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு'' என்றனர் நம் முன்னோர். பாவேந்தரும் அறிவை விருத்தி செய்யவேண்டுமென்று வலியுறுத்தி இவ்வாறு பாடுகின்றார். அறிவை விரிவு செய் . விசாலப்பார்வையால் விழுங்கு மக்களை அணைந்து கொள் உன்னை சங்கமமாக்கு மானிட சமுத்திரம் நான் என்று கூவு என்கிறார்.

அறிவுக்குள்ள மற்றொரு நற்பண்பு என்னவென்றால் அது ஒருவரிடமிருந்து மற்றவரிடம் இடம்பெயர்ந்து விடாது எவராலும் இடம்பெயர்த்துவிடமுடியாது. ஒரு செல்வந்தரின் சொத்துக்கள் எளிதாக அவரது வாரிசிடம் வந்து சேர்ந்து விடும். ஒரு தலைவரின் கொள்ளைகள் எளிதாக அவர் தம் தொண்டர்களிடம் வந்து சேர்ந்து விடும். ஆனால் ஒரு அறிஞரின் அறிவானது எளிதாக அவரது வாரிசுகளுக்கோ தொண்டர்களுக்கோ வந்து சேராது. அவரவர் அறிவில் முயன்று பாடுபட்டால்த்தான் பெறமுடியும். அத்தகைய சிறப்பு வாய்ந்த அறிவைப் பெற்றுப் பயன்படுத்தி அவனியில் வாழ்வாங்கு வாழ்ந்து வரலாற்றில் நிலைத்த இடத்தைப்பெறுவோமாக.

*வேலூர் நாராயணன்*

# யாழ்.மாவட்டப் பாடசாலைகள் வருட இறுதிக்குள் புனரமைப்பு

## கல்விச் சமூகம் கூடித் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள சேதமடைந்த பாடசாலைகளை மீளப்புனரமைப்பது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாயன்று யாழ். வலயக்கல்விப் பணிமனையில் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் வலயக்கல்விப்பணிப்பாளர்கள், யுனிசெவ் நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் பொறியியலாளர்கள், பாடசாலை அதிபர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இதில் பங்கேற்ற பாடசாலை அதிபர்கள் தத்தமது பாடசாலைகளின் நிலைப்பாடுகள் பற்றியும் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகள் பற்றியும் விளக்கமாக எடுத்துக்கூறியதுடன் அங்கு நிலவும் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்தும் விரிவாக எடுத்து விளக்கினர்.

இதற்கமைவாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் பிளாஸ்ரிக் நீர்த்தாங்கிகள் அமைத்தல் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் போன்றவற்றை வழங்குதல் மலசல கூடங்கள் அமைத்தல், வகுப்பறைகளைப் புனரமைத்தல் உட்பட அவற்றை அழகுபடுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுதல் ஆகிய செயற்பாடுகள் டிசம்பர் மாதத்திற்குள் சம்பந்தப்பட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக யுனிசெவ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுப் பணிகள் யாவும் முடிவடைய வேண்டும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேற்படி தீர்மானத்தினை செயற்படுத்துவதன் மூலம் தீவக வலயப் பாடசாலைகள் பெரிதும் பயனடையும் எனவும் பாடசாலைகளில் நிலவிவரும் சுகாதாரப்பிரச்சினைகள் நிவிர்த்தி செய்யப்படும் எனவும் கலந்துரையாடலில் கலந்து கொண்ட அதிபர்கள் கருத்துத் தெரிவித்தனர். (உ-7)

## வவுனியா வடக்குப் பிரதேசத்தில்

# மீள்குடியமர்ந்த மக்களின் அபிவிருத்தி பணிகளைப் புலிகள் முன்னெடுப்பர்

(மருதங்கேணி)

வவுனியா வடக்கு பிரதேசத்தில் மீளக் குடியமர்த்த மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் யாவும் தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்னெடுக்கப்படவுள்ளன.

கடந்த திங்களன்று நெடுங்கேணி பொது மண்டபத்தில் வவுனியா அரச அதிபர் க. கணேஸ் தலைமையில் இடம் பெற்ற மீளக் குடியேறிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பான முக்கிய கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி மேற்படி பகுதியில் மீள்க குடியேறியுள்ள மக்களுக்கு உணவு, பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம், சுயதொழில் வாய்ப்பு மற்றும் விவசாய நடவடிக்கைகள், வீதிப்புனரமைப்பு உட்பட விலங்குவேளாண்மை தொடர்பான அபிவிருத்திப் பணிகள் யாவும் விடுதலைப் புலிகளினால் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அதேவேளை, இதுவரை கால மும்மேற்படி அபிவிருத்திப் பணிகளை பொது நிறுவனங்கள் மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது(உ-35)

## இராசி பலன்

**26.09. 2003**

**(புரட்டாதி,09,வெள்ளி**

**அமாவாசை - மு.ப 9.37வரை**

**உத்தரம் - பி.ப. 12.27 வரை**

**இராகுகாலம் - 10.32-12.02**

**சுபநேரம் - 6.02-7.32**

**சித்தாமிர்தம், நவராத்திரி விரதம**

**மேடம்**
தேக ஆரோக்கியம், எடுத்த கருமங்கள் கைகூடும், மனமகிழ்ச்சி, சததுருஜெயம்.

**இடபம்**
தெய்வசிந்தனை, தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதம், குடும்பக் கவலை.

**மிதுனம்**
தாய்வழி உறவு, உடல் சோர்வு, காரிய தாமதம், தனவிரயம்.

**கடகம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், பிரயாண நன்மை, தனலாபம், வாக்கு மேன்மை.

**சிங்கம்**
கடுமையான வார்த்தை, காரிய தாமதம், வீண்செலவு, குடும்பக் கவலை.

**கன்னி**
சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, பிரயாணம், தெய்வதரிசனம்.

**துலாம்**
கோபப்படுதல், வேலைக்கஷ்டம், முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை.

**விருச்சிகம்**
நல்ல காரியம், பொருள் சேர்க்கை, உறவினர் வருகை, கீர்த்தி.

**தனுசு**
பிறர் ஒத்துழைப்பு, அதிகாரம், காரிய சித்தி, நிலை மாற்றம்.

**மகரம்**
புதிய திட்டமிடல், கலந்துரையாடல், ரோக நிலை, திடீர்ப் பயணம்.

**கும்பம்**
பெரியோர் பொறுப்பு, பிரயாண பயம், காரிய தடங்கல், போசன சுகம்.


**மீனம்**
குடும்ப சுகம், தெய்வ தரிசனம், காரிய நன்மை, பொருள் சேர்க்கை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன.**

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்

# 5இராணுவ புலனாய்வு உறுப்பினர்கள் கொலை



(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் - விடுதலைப புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பின்னர் இராணுவப் புலனாய்வுப்பிரிவைச்சேர்ந்த 5பேர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என பாதுகாப்பு அமைச்சர் திலக் மராப்பன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் ஜே.வி.யின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், கொலை செய்யப்பட்ட இராணுவப் புலனாய்வுப்பிரிவினரில் 4 பேர் விடுதலைப்புலிகளினால் கொலை செய்யப்பட்டவர்களாவர். இலங்கை இராணுவத்திற்குத் தகவல் வழங்கிய பதினொரு தமிழ்- முஸ்லிம் இளைஞர்கள் கொலை செய்யப் பட்டுள்ளனர் என்றார். (த)

## செயற்திறன் அரங்க இயக்க ஏற்பாட்டில்

# நாவலர் மணிமண்டபத்தில் சிறுவர் அரங்கு-கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

செயல் திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் ''வளரும் பயிருக்கு முளையில் உதவும்'' என்னும் தொனிப்பொருளிலான சிறுவர் அரங்கு- கருத்தரங்கு நாளையும் நாளை மறுதினமும் நல்லை நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப நாள் நிகழ்வு காலை 9.30 மணிமுதல் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இதில், ஆய்வுரைகளை பேராசிரியா சபா.ஜெயராசா, கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம், தே.தேவானந்த் ஆகியோரும், கருத்துரையை பு.கணேசராஜாவும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து பா.பகீரதி, நா.சிவசிதம்பரம், க.இ.கமலநாதன் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) ஆகியோர் ஆய்வுரைகளையும் ஞா.ஜெயரஞ்சினி, ச. கிருபானந்தன், நா. ஜெயந்து ஆகியோர் கருத்துரைகளையும் வழங்கவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இதில் ஆய்வுரைகளை மு.ராதாகிருஸ்ணன், கந்தையா ஸ்ரீகணேசன், கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் ,ஜோன்சன் ராஜ்குமார், தே.தேவானந்த் ஆகியோரும், கருத்துரைகளை என். சத்திய குமார், கை.திலகநாதன், ந.கெனத், அ.விஜயநாதன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (உ)

## நவராத்திரி பெருவிழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீட மாதரணியினர் நடாத்தும் நவராத்திரிப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 5ஆம் திகதி வரை கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள சர்வதேச இந்து மத குருபீட தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (உ-10)

## பேச்சுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசாமி கோவில் இளந்தொண்டர் சபை நவராத்திரி தினத்தையொட்டி நடாததும் பேச்சுப் போட்டிகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (உ-18)

# வந்தது வசந்தம்

வெள்ளி முற்றம்

பொன். இராசதுரை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகாமையில் இருக்கும் கந்தப்ப சேகரம் வீதி முகப்பில் நிற்கும் பூவரச மர நிழலிலே தான் நான் முதன் முதலில் அந்தச் சிறுவனைக் கண்டேன். கறுப்பு நிறமென்றாலும் நல்ல களையான முகம் .குறு குறுத்த கண்கள். தோய்த்துத் தோய்த்துக் காவி நிறத்தையடைந்த போதிலும் சுத்தமான அரைக்கால் சட்டை அணிந்திருப்பான். நெற்றியில ஆஸ்பத்திரி வளவுக்குள் இருக்கும் வயிரவர் கோவிலில் பெற்ற சந்தனப்பொட்டு. கையிலே ஒரு உடைந்த சிலேட்டுடன் அங்குமிங்கும் போய் வருவோரைப் பார்த்துக்கொண்டே இருப்பான். அவனுக்கு முன் விரித்த ஒரு பேப்பருக்கு மேல் தகரப்பேணி ஒன்று காணப்படும். போய் வருவோரில் ஒரு சிலர் வீசி எறிந்த ஒரு ரூபாய், ஐம்பது சதக்குற்றிகள் பேணிக் குள்ளும் பேப்பர் மேலும் காணப்படும். பாடசாலை செல்லும் சீருடை அணிந்த சிறுவர்களைக்கண்டால் அவன் முகம் பரபரக்கும். கண்களில் கண்ணீர் ததும்ப அவர்களையும் தனது கையிலிருக்கும் சிலேட்டையும் பார்ப்பான்.

நான் வாரத்தில் மூன்று நாட்களாவது சொந்த அலுவல்காரணமாக டவுணுக்கு வந்து போவது வழக்கம. அப்படி வந்த போது தான் ஒரு நாள் அந்தச்சிறுவனைக்கண்டேன். டவுண் வீதிகளில் போவோர் வருவோர்களிடம் ஐயா பசிக்குது, ஐயா பசிக்குது என இரக்கும் சிறுவர்களைக் கண்டால் பிடிக்காத எனக்கு அமைதியே உருவாக வாய்திறந்து பிச்சை என்று கேட்காத அந்தச் சிறுவனைப் பார்த்த மாத்திரத்தே என்னை அறியாமலே அவன் மீது ஓர் ஈர்ப்பு ஏற்பட்டு விட்டது. ஆரம்பத்தில் பார்த்தும் பாராத மாதிரிச் சென்று கொண்டிருந்த நான் நாளா வட்டத்தில் அவனருகில் நின்று அவனைக் கூர்ந்து கவனிக்கவும் மெல்ல மெல்ல பேச்சுக் கொடுக்கவும் ஆரம்பித்தேன். இந்தப் பழக்கம் காலை வேளையில் அவனுக்கு ஏதாவது சிற்றுண்டி வாங்கிக்கொடுக்கும் அளவுக்கு நீண்டது. நான் எதைக் கொடுத்தாலும் அதில் அரைவாசியைச் சாப்பிட்டு விட்டு மிகுதியை மடித்துக்கட்டித் தனது கால்சட்டைப் பைக்குள் பத்திரப்படுத்திக் கொள்வான். ஒரு நாள் அவனிடம் ஏன் நீ முழுவதையும் சாப்பிடுவதில்லை என்று கேட்டதற்கு அவன் சென்ன பதில் ''நான் எல்லாத்தையும் சாப்பிட்டுவிட்டால் என் குட்டித்தங்கச்சிக்கு எதைக்கொடுப்பேன்?

ஆரம்பத்தில் அவனை அலட்சியமாகக்கவனித்தாலும் நாளாவட்டத்தில் அவனது நடவடிக்கைகளால் சிறிது சிறிதாக ஈர்க்கப்பட்டேன். அவன் வாய் திறந்து யாரிடமும் பிச்சை என்று எதுவும் கேட்டக மாட்டான்.அவன் முன் இருக்கும் தகரப்பேணிக்குள் யாராவது இரக்கப்பட்டு ஏதாவது போட்டால் அவரை தலை நிமிர்ந்து ஒரு முறை பார்த்து விட்டுத் தலையைத் தாழ்த்திக் கொள்வான். அவன் கையில் இருக்கும் சிலேட்டில் இடைக்கிடை ஏதாவது எழுதுவான். கணக்குப் போடுவான். ஆசிரியனாகப் பணியாற்றி ஓய்வுபெற்றிருந்த எனக்கு அவனைப் பார்த்தமாத்திரத்தே படிப்பதில் அவனுக்கிருந்த ஆர்வம் புலப்பட்டது. நாளாவட்டத்தில் டவுணுக்குப் போகும்போதெல்லாம் சிறிது நேரம் அவனோடு நின்று பேசுவதும் அவனுக்கு ஏதாவது தின் பண்டங்கள் வாங்கிக் கொடுப்பதும் எனக்கு வழக்கமாகிவிட்டது.அடுக்கடுக்காக ஆறு பிள்ளைகளைப்பெற்று வளர்த்து, கல்வி புகட்டி அவர்களை ஆளாக்கி விட்டதும் அவர்கள் ஆளுக்கொரு ஊரென்று கனடா, இங்கிலாந்து, ஜேர்மனி என்று பறந்துபோய் குழந்தை குட்டிகளுடன் வாழ, இங்கு நானும் எனது மனைவியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி பென்னாம்பெரிய வீட்டில் வரண்ட வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த எனக்கு அந்தச்சிறுவனுடன் பேசும் சில நிமிட நேரங்கள் பரம சந்துஷ்டி அளிப்பதாக இருந்தது.

நீங்களும் அம்மாவும் ஏன் அங்கு தனியாக இருக்க வேண்டும்; எங்களிடம் வந்து விடுங்கள் என அழைத்து அழைத்துப் பிள்ளைகள் அலுத்துவிட டனர். பிறந்த மண்ணிலேயே கடைசி வரை இருக்கவேண்டும் என்ற வைராக்கியத்தால் வெளிநாடு சென்று வாழ்வதை வெறுத்தேன். உள்ளுக்குள் விருப்பம் இருந்ததோ என்னமோ தெரியாது என் மனைவியும் என்னை விட்டுப்போக விரும்பவில்லை. பிள்ளைகள் வருடத்திற்கு ஒருமுறை குடும்பத்தோடு வந்து ஒரு மாதம் நின்று போவார்கள்.

அவர்கள் நிற்கும் வரை வீடு கலகலவென்று இருக்கும். போனதும் பழையபடி வேதாளம் முருங்கை மரம்ஏறிய கதைதான். அந்தப் பெரிய வீட்டில் எங்கள் தனிமைக்கு ஆறுதல் அளித்தவை நாங்கள் வளர்த்து வந்த இரண்டு ஆட்டுக் குட்டிகளும், நாய், பூனைக் குட்டிகளும் தான்.

ஒரு நாள் அந்தச் சிறுவனிடம் நீ யார்? உனது ஊரென்ன? அப்பா அம்மா எங்கே என்று நான் கேட்டதற்கு அவன் கூறிய பதில் என்னை அதிரச் செய்தது. இந்தச்சின்னஞ் சிறிய வயதில் எத்தனை பெரிய சோகத்தை மனதுள் பூட்டி வைத்திருக்கிறான் என எண்ணியபோது என் நெஞ்சு வெடித்து விடும் போல இருந்தது. தாய்,தந்தை, சகோதரியுடன் அந்தச்சிறுவனும் சந்தோசமாகத்தான் வாழ்ந்து வந்தான்.பெற்றோருக்குச் செல்லப்பிள்ளையாக, பாடசாலையில் கெட்டிக்காரப்பிள்ளையாக, தங்கை மேல் பாசம் பொழியும் அண்ணனாக வாழ்ந்து கொண்டிருந்த அவனது வாழ்வு ஒரு பகற்பொழுது நேரத்தில் சின்னாபின்னப் பட்டு விட்டது. போர் அரக்கனின் கோரப்பார்வை அந்தச் சிறுவனது குடும்பத்தை விட்டு வைக்க வில்லை. அவனும் சகோதரியும் பாடசாலை சென்றிருந்த நேரத்தில் நடைபெற்ற விமானக் குண்டு வீச்சு அவனது வீட்டைத் தரை மட்டமாக்கியதுடன். பெற்றோர்களையும் உருத்தெரியாமல் ஆக்கி விட்டது. குண்டு வீச்சுச் சத்தத்தைக் கேட்டு ஓடோடி வந்த அவன் கணட காட்சி.... எட்டுவயது சிறுவனான அவனும் ஐந்துவயது சிறுமியான அவன் தங்கையும் ஓரிரு நிமிடத்தில் யாருமற்ற அனாதைகள் ஆயினர். படிப்பிலே சுட்டியான அவனுக்குப் படிக்கப்பேராசை. அடுத்த நேர உணவுக்குக் கதியற்ற அவனுக்குப் படிப்பதற்குயார் உதவி செய்வார்கள்.

தங்கையின் கையைப்பிடித்தபடி புறப்பட்ட அவனுக்கும் அவன் தங்கைக்கும் கொட்டடிக் குறுக்குத் தெருவலே இருந்த இன்னாச்சிக்கிழவியும் கொட்டில் திண்ணையும் புகலிடமளித்தது.பிறந்த நாளில் இருந்து எவரிடமும் கைநீட்டி எதையும் பெற்றிராத அந்தச் சிறுவன் தானும் தங்கையும் வாழ்வதற்காகக் கந்தப்பசேகரம் தெரு மூலையைத் தேர்ந்தெடுத்தான்.பகலில் தங்கையைப் பக்கத்து வீட்டுச் சிறுவர்களுடன் விட்டுவிட்டுப் புறப்பட்டால் பொழுது சாய்ந்த பின் தான் வீடு திரும்புவான். சில வேளைகளில் அன்றைய உணவுக்குக் கூட வழியில்லாமல் பட்டினி கிடந்ததும் உண்டு.

அவனைப் பார்க்கும் போதெல்லாம் அவனுக்கும் அவன் தங்கைக்கும் ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று என் மனம் எண்ணும்.எப்படி என்ன உதவி செய்வது என்று தெரியாததால் என் எண்ணம் அப்படியே மறைந்துவிடும்.

அந்தச் சிறுவனை நான் சந்தித்தது ஒரு தைமாதத்தில். அவனைச் சந்தித்துப் பத்து மாதங்கள் எப்படிப் போனதென்றே தெரியவில்லை. வரப்போகும் தீபாவளிக்கு அவனுக்கும் அவன் தங்கைக்கும் புதுத்துணி எடுத்துக் கொடுக்க விரும்பினேன். எடுத்தும்விட்டேன் இரண்டுதினங்கள் கழிந்தால் தீபாவளி. தீபாவளியன்று காலை அவனிடம் கொடுக்க இருக்கும் போது முதல்நாள் இரவு வந்தது அந்தப் பேரிடி.



அந்த இரவுவானத்தில் பல குழல் பீரங்கிகளின் பயங்கர சப்தம். வேகமாகச் செல்லும் விமானங்களிலிருந்து வீசப்படும் பயங்கரக் குண்டுகள் யாழ்ப்பாண நகரமே அலலோல கல்லோலப் பட்டது. கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு எங்கே போகிறோம் என்ற எண்ணமின்றி மக்கள் நாற்புறங்களிலும் சிதறிஓடத் தலைப்பட்டனர்.நான் வசித்த பகுதியில் அசம்பாவிதங்கள் எதுவும் நிகழவில்லை. ஆனால் அந்தச் சிறுவனின எண்ணம் என்னை இருக்கவிடவில்லை. இந்தப் பக்கமாக ஆமிவருகிறது-அந்தபபக்கமாக புலிவருகிறது என்று சனங்கள் கண்ணால் கண்டதைப் போல் எதையெதையோ பேசிய படியே ஓடிக் கொண்டு இருந்தார்கள். அதற்கு மேலும் என்னால் வீட்டில் இருக்க முடியவில்லை.மனைவிக்குத் தெரியாமல் சைக்கிளை உருட்டியபடி தெருவுக்கு வந்தேன்.

கொட்டடி குறுக்குத் தெருவில் இருப்பதாக அவன் சொன்னது ஞாபகத்தில் இருந்தது.எப்படியோ அந்த இடத்தை அடைந்துவிட்டேன். அங்கு நான் கண்டகாட்சி அந்தப் பக்கத்தில் ஒரு குடிசைகூட மிஞ்சவில்லை. குடிசைகள் எல்லாம் எரிந்து சாம்பராக மரங்கள் எல்லாம் குண்டு வீச்சால் சிதறுண்டனவாக அந்த இடம் காணப்பட்டது. ஓரிரு தெரு நாய்களைத் தவிர வேறு நடமாட்டம் எதுவுமே அங்கு இல்லை.

அவன் எங்கே? யாரிடம் விசாரிப்பது என்ற எண்ணத்துடன் பார்வையை நாற்புறமும் சுழல விட்டேன்.சரிந்து கிடந்த பாரிய அரசமரமொன்றின் அடியிலே ஒருவரை ஒருவர் அணைததபடி இரண்டு சிறுஉருவங்கள் கிடப்பதைக் கண்டதும் என்நெஞ்சு துணுககுற்றது.கிட்ட ஓடோடிச் சென்று பார்த்தபொழுது அந்தச் சிறுவனும் அவன் தங்கையும் ஒருவரையொருவர் அணைத்த படி பசிக்களையால் மயங்கிக் கிடப்பதைக் கண்டேன்.

அடுத்து நான் என்ன செய்தேன் என்று எனக்கே தெரியாது. எங்கே அந்த ஓட்டோவைப் பிடித்தேன்.எப்படி அவர்களை வீட்டுக்குக் கொண்டு வந்தேன் என்பது ஒரு கனவு போல இருக்கிறது.

இப்பொழுது எனது வீட்டில் வசந்தம் பிறந்துவிட்டது. அவர்கள் இருவரும் என் மனைவியின் இரு கண்களாகி விடடனர். அவன்-அவள் பெயர் செல்லம்- இப்பொழுது பாடசாலைக்குப் போகிறான். அவனது தங்கை பிரியா- முன்பள்ளிக்குச் செலகிறாள்.வீட்டின் முன்புறத்தில் அவர்கள் நாட்டிய பூங்கன்றுகள் பூத்துக் குலுங்க ஆரம்பித்துவிட்டன. எங்களது வளாப்புப் பிராணிகளுக்கும் அவர்களுக்கும் நல்ல சினேகம். வெளிநாட்டில் வசிகக்கும் என் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் இனி இங்கு வந்தால் என்ன-வராவிட்டால் என்ன ! அவர்கள் வளர்ந்து பெரியவர்களாவார்கள்.படித்துப் பட்டம் பெறுவார்கள்.டாக்டராகவோ என்ஜினியராகவோ வருவார்கள். முதுமைக் காலத்தில் எங்களுக்கு ஊன்றுகோலாக இருப்பார்கள்.

''எங்கிருநதோ வந்தான் இடைச் சாதி நானென்றான்

ஈங்கிவனை நான் பெறவே என்ன தவம் செய்தேனோ ''

என எங்கள் வீட்டு வானொலி அடிக்கடி பாடுகிறது ☐

# சுகாதார ஊழியர் போராட்டத்திற்கு 80 தொழிற்சங்கங்கள் ஆதரவு

(கொழும்பு)

சம்பள முரண்பாட்டை நிவிர்த்தி செய்யக்கோரி சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர அரசிற்கு அழுத்தம் கொடுப்பது என 80 தொழிற் சங்கங்கள் கூடித் தீர்மானித்துள்ளன.

நேற்று முன்தினம் கொழும்பு வங்கிச் சேவையாளர் தலைமையகததில் 80 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த நூற்றிற்கும் மேற்பட்ட தொழிற் சங்கப பிரதிநிதிகள் கூடி இத்தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

சுகாதாரத்திணைக்கள ஊழியர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை உடன் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்துவது எனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தின் உண்மையான நோக்கம் குறித்த துண்டுப் பிரசுரங்களை நாட்டின் பிரதான நகரங்களில் ஒரே நாளில் விநியோகிப்பது எனவும் இக்கூட்டத்தில் மேலும தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(உ-61,10)

## செம்மணிப் புதைகுழி விசாரணை

# அறிக்கை சமர்ப்பிக்க நவம்பர் நடுப்பகுதி வரை அவகாசம்

(கொழும்பு)

செம்மணி புதைகுழி விசாரணை பற்றிய முறையான அறிக்கை ஒன்றை எதிர் வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நீதி மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தைப் பணிததுள்ளது.

இதேசமயம் உயிரிழந்தவர்களின உறவினர்களின் இரத்தம் டி.என்.ஏ.பரிசோதனைக்கு இங்கிலாந்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான விசாரணை அறிக்கைகள் இன்னும்,தம்கசுக் கிடைக்கவில்லையெனவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதி மன்றிற்குத் தெரிவித்துள்ளது. (உ-61,10)

# முதல் மூன்று வாரங்களில் மட்டும் 3400 தே. அ. அட்டைகள் விநியோகம்

(கொழும்பு)

கடந்த செப்ரெம்பர் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளை ஒரு நாளில் வழங்கும் விசேட திட்டத்தின் மூலம் முதல் 3வாரங்களில் 3400 தேசிய அடையாள அட்டைகள் ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன.

இது பற்றி ஆட்பதிவுத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்,

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் இருந்து கொழும்பு கெற்பிட்டி பொலமாவத்தையில் அமைந்துள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தின் தலைமையகத்திற்கு மக்கள் தமது தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்காக வருகை தந்திருந்தனர்.

தினமும் 225 விண்ணப்பங்கள் வந்து சேர்கின்றன. 12.00 மணி வரையே விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு பி.ப. 4.00 மணிக்கு உரியவர்களிடம் அடையாள அட்டைகள் கொடுக்கப்படுகின்றன இவ் ஒரு நாள்திட்டதில் இணைந்து பயன்பெறவிரும்புபவர்கள் தமது விண்ணப்பப்படிவத்துடன் தங்கள் பிரதேச கிராம சேவகரின் உறுதிப் படுத்தலுடனும் திணைக்களத்திற்கு நேரடியாக விஜயம் செய்தல் வேண்டும். அத்துடன் ரூபா. 500 செலுத்த வேண்டும்.

இத்திட்டம் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் மேற்பார்வையில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. தமது அடையாள அட்டையைப் பெறுவதற்காக மக்கள்எதிர் நோக்கும் சிக்கல்களையும் தாமதத்தையும் குறைப்பதே இதன் நோக்கம் என்றுள்ளது. ((பி-6)

*உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவி லாதார்*
*– குறள்*

## வலம்புரி

### பெறுமதி குறைகிறது

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாணவர்களிடையேயான உறவு நிலையில் பாரிய மாற்றம் அண்மைக் காலங்களில் ஏற்படுவதை உணர முடிகிறது. இத்தகைய மாற்றம் வக்கிர உணர்வின் வெளிப்பாடாகக் கூட இருக்கலாம். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரை உலகில் எங்குமில்லாத தனிச் சிறப்புக்கள் யாழ்.பல்கலைக் கழகத்திற்குண்டு.

அதாவது, பல்கலைக் கழகங்கள் என்றால் அங்கு பல்லின மாணவர்கள்-பல்லின விரிவுரையாளர்கள் என வேறுபட்ட கலாசாரத்தையுடையவர்கள் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுவர். ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அப்படியன்று, ஒரேயினம், ஒரே மொழி ஒரே உறவு என்ற ஓரினக் குழுமத்தைக் கொண்ட உயர் கல்விப் பீடமாக அது விளங்குகின்றது. இங்கு வேற்று மொழியினர் இல்லை, வேற்று இனத்தவர்கள் இல்லை. எல்லா முகங்களும் அறிமுகமான முகவரிகளே. அவ்வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சிறப்பை ஏனைய பலகலைக் கழகங்களில் காண முடியாது.

இத்தகையதோர் இனக் குழு உயர் கல்விப் பீடமாக விளங்குகின்ற யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலேயே மாணவர்கள் முரண்பட்டுக் கொள்ளும் நிகழ்வு நடைபெறகிறதாயின் அங்கு இருக்கக் கூடிய பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டும்.

பல்கலைக் கழகங்கள் என்பன புத்திஜீவிகளை உருவாக்கும் உற்பத்தி நிறுவனங்கள் என்பதே சமூகத்தின் கணிப்பு அத்தகைய கணிப்பு நியாயமானதும் கூட.

அவ்வாறானதோர் கணிப்பீட்டின் மத்தியில் பல்கலைக் கழக மாணவர்களிடம் சமூகத்தின் எதிர்பார்ப்பு சற்று வித்தியாசமானதாகவே காணப்படும். அத்தகையதோர் எதிர்பார்ப்பில் இருக்கின்ற சமூகத்திற்கு பல்கலைக் கழக மாணவர்கள் வழங்குகின்ற கொடுப்பனவு எதிர் மறையானதாக இருப்பது அதிர்ச்சிக்குரியது மட்டுமல்ல; யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உருவாக்கத்திலும் ஓர் ஐயத்தை ஏற்படுத்திவிடுவதுடன் யாழ்.பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படுகின்ற பட்டச் சான்றிதழ்களின் கனதியையும் அடியோடு சரித்துவிடும்.

யாழ்.பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட மாணவர்களின் தாக்குதலால் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்ற கனிஷ்ட மாணவர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாகக் கூடி வருவது பல்கலைக் கழகத்தின் பெருமையைத் தேய்வடையச் செய்யும் என்பதில் ஐயம் இல்லை. எனவே இது விடயத்தில் பல்கலைக் கழக சமூகம் விழிப்போடு நடந்து கொள்ளாவிடில் எதிர் காலம் கவலைக்குரியதாகவே அமையும்.

# ஈழத்தவர்கள் அபாயக்குரல் எழுப்பும் போது அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவது எமது கடமை

## மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறார் பழ.நெடுமாறன்

(இந்தியா)

விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல. அது விடுதலைக்காகப் போராடுகின்ற ஓர் இயக்கம். இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய நேதாஜி மற்றும் சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோரின் இந்திய தேசிய இராணுவம் போன்று பிரபாகரன் தலைமையில் அவ்வியக்கம், தமது மண்ணை மீட்கப் போராடி வருகிறது.

அந்த வகையில், ஈழத் தமிழருக்கு உதவவேண்டிய கடப்பாடு இந்தியத் தமிழர்களுக்கு உண்டு. இதைத்தான் நான் செய்தேன். இதற்காகச் சிறை செல்வதை நான் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் பொடா நீதி மன்றில் அளித்த வாக்குமூலத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் பயங்கரவாத பொடா சட்டப் பிரிவுகளின் கீழ்க் குற்றம் சாட்டப்பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் உடபடப் பொதுச் செயலாளர் சு.ப.வீரபாண்டியன், இரா. பாவாணன், மருத்துவர் அ.தாயப்பன் மற்றும் சாகுல் ஹமீது ஆகியோர் மீது சிறப்பு நீதி மன்றத்தில் வழக்குப் பதிவுசெய்யப் பட்டிருந்தது.

நீதிபதி இராசேந்திரனின் பணிப்பின் பேரில் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்து நீதி மன்றில் பழ.நெடுமாறன் எழுத்து மூலம் அளிக்கப்பட்ட வாக்குமூலத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

தொடர்ந்தும் அவரது வாக்கு மூலத்தில்,

இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்கள் எங்களோடு இரத்த உறவு பூண்டவர்கள். சிங்களவரின் இரத்த வெறி கொண்ட இனப் படுகொலைக்குத் தமிழர்கள் உள்ளாக்கப்பட்டு அவர்கள் அபாயக்குரல் எழுப்பும் போது நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. மனிதநேய உணர்வு கொண்டவர்கள் யாராக இருப்பினும் அப்படி சும்மா இருக்க முடியாது. அந்த வகையில்தான் நான் ஈழத்தமிழருக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்துள்ளேன்.

இந்தியாவின் வட-கிழக்கு மாநிலங்களில் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களுடன் பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தை இன்னமும் உயர் அதிகாரிகளால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தடைசெய்யப்பட்ட இயக்கம் ஒன்றை ஆதரித்துப் பேசுவதே குற்றம் என்றால், பிரதமரும் துணைப்பிரதமரும் செய்வது மாத்திரம் நியாயமானதா?

எம்மீது அரசியல் உள்நோக்கத்துடன் பழிவாங்குவதற்காகவும் சனநாயக உரிமைகளை நசுக்கவுமே திட்டமிட்ட வகையில் பழி சுமத்தப் பட்டுள்ளது.

தற்போதைய காலகட்டத்தில் 51 இற்கும் மேற்பட்ட உலக நாடுகள் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்திச் சம்மதிக்க வைத்துள்ள இந்த நிலையில், அவை அனைத்தும் ஈழத் தமிழரின் ஏக பிரதிநிதியாக விடுதலைப் புலிகள் அமைப்பை அங்கீகரித்துள்ளன. ஆனால், இந்தியாவின் முன்னைய அரசியல்வாதிகளின் காழ்ப்புணர்வும், உள்நோக்கமுமே புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வைத்துள்ளது.

ஆனால், ஈழத் தமிழர்களுக்கு தமிழக, இந்திய அரசுகள் உதவ வேண்டும் என்பதைத் தான் நாங்கள் வற்புறுத்தி வருகின்றோம். ஈழத் தமிழர்களுக்கு உதவவேண்டிய கடமையை நான் செய்ததற்காக என் மீது பொடா சட்டம் ஏவப்பட்டுள்ளது.

ஈழத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் வாழ வேண்டிய வயதில் தங்கள் மண்ணை மீட்பதற்காகத் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்யும்போது, அவர்களுக்கு ஆதரவாக இந்த வயதிலும் சிறை செல்லும் சிறு தியாகமேனும் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததையிட்டு நான் பெருமையடைகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (உ-18)

### வானொலி அலைவரிசை ஆரம்பிக்க

# புலிகள் சமர்ப்பித்த ஆவணங்கள் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் வானொலி அலை வரிசையை ஆரம்பிப்பதற்காக சமர்ப்பித்திருந்த விண்ணப்பம் தொடர்பாக ஆவணங்களை தொழில் அமைச்சர் மகிந்தசமரசிங்க நேற்றுப் பாராளுமன்றத்தில் வைத்து சபாநாயகரிடம் கையளித்துள்ளார்.

ஜே.வி.பி உறுப்பினர் எழுப்பிய வினா ஒன்றுக்கு பதில் அளிக்கும் வகையில் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இமதியாஸ் பாக்கீர் மாக்காரின் சார்பாக மேற்படி விண்ணப்பம் தொடர்பான ஆவணங்களை சபாநாயகரிடம் மகிந்தசமரசிங்கா கையளித்தார்.

சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட ஆவணம் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் விடுத்த கோரிக்கைகளுக்கு அமையவே வானொலி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது என்றும்,

விடுதலைப் புலிகள் கடந்த 18 மாதங்களாக அதாவது புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் ஆயுத நடவடிக்கையில் இறங்க வில்லை என்றும், அந்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டது.

வானொலி அலை வரிசைகளை ஒடுக்க முடியும் பட்சத்தில் எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் கோரிக்கைகளையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியும் எனவும் அந்த ஆவணத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந் நிலையில் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தமது பல கேள்விகளுக்குப் பதில் கிடைக்கவில்லை என்று கூறிப்பிட்டார்.

அத்துடன் நாட்டைப் பிளவு படுத்த முனைந்ததாகத் தாம் குறிப்பிடும் ஓர் அமைப்பிற்கு வானொலி அனுமதிப்பத்திரம் வழங்க அரசியல் யாப்பு இடமளிக்கின்றதா என்ற கேள்வியையும் அவர் மீண்டும் எழுப்பினார்.

அதற்குப் பதில் அளித்த அமைச்சர் மகிந்தசமரசிங்க இக் கேள்வியை மக்கள் தொடர்பாடல் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின் நேரடிக்கவனத்திற்குக் கொண்டு வரவுள்ளதாகத் தெரிவித்தார்.

(உ-60,10)

# அதிகாரப் பரவலாக்கலை கைவிட்டால் கூட்டுக்குத் தயார்

## ஜே.வி.பி நிபந்தனை

(கொழும்பு)

அதிகாரப்பரவலாக்கல்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு அல்ல என்னும நிலைப்பாட்டிற்கு ஸ்ரீ.சு.கட்சி சம்மதித்தால் கூட்டுச் சேர்வது பற்றிய அக்கட்சியுடனான பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்குத் தான் தயாராக இருப்பதாக ஜே.வி.பியின் அரசியல் குழு அறிவித்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கம் தான் தீர்வு என்ற சுதந்திரக்கட்சியின் நிலைப்பாடுதான் இரு கட்சிகளுக்கிடையேயான பேச்சுக்கள் முறிவடைய முக்கிய காரணம்.

பேச்சுக்கள் முறிவடையக் காரணமான அனைத்து விடயங்கள் குறித்தும் கலந்துரையாட நாம் தயாராகவுள்ளோம்.ஆனால் அதிகாரப் பரவலாக்கம் கைவிடப்பட வேண்டும்

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியுட்பட மூன்று பிரதான அமைச்சுக்களை ஜே.வி.பியினர் கோரியதால்தான் பேச்சுக்கள் முறிவடைந்ததென ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் அழிவிலிருந்து நாட்டை மீட்க இத்தகைய கூட்டணி ஒன்று அவசியம் என்பதாலேயே பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க நாம் தயாராகவுள்ளோம் என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

### தினசரி தியானம்

**அன்பே கடவுள்**

சூரியனிடம் உள்ள ஒளியும், சக்தியும், நீரின் சுகந்தரும் குளிர்ச்சியும், மலர்களது மகிழ்ச்சி தரும் மணமும், மலைகளின் கம்பீரமும் உணவுப் பொருட்களில் உள்ள உயிர்ச் சத்தும் இறைவனுடைய காட்சிகளே இந்த அண்டத்தைப் படைத்து அதை நிலை நிறுத்திக் கொண்டிருக்கிற மிக மேலான ச்க்தி இறைவனே. அந்த சக்தி அன்பேயாகும். அன்பே கடவுள்.

**சுவாமி சிவானந்தர்**

### ஆசிரியர் தின விழாவில்

# கறுப்பு கைப்பட்டி அணிந்து ஆசிரியர்கள் பங்கேற்பர்

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதியன்று கொண்டாடப் படவுள்ள ஆசிரியர் தினத்தன்று அனைத்து ஆசிரியர்களும் கறுப்புக் கைப்பட்டி அணிந்து செல்ல வேண்டும் என ஆசிரியர் சங்கத் தலைவர் வசந்த தர்மசிறி கேட்டுள்ளார்.

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குக் கல்வி அமைச்சு இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இது நடை முறைப்படுத்தப்படவுள்ளது.

அன்று ஆசிரியர்களுக்கு சுகவீன லீவு விடுமுறை நாளாக இருக்கும். மேலும் அன்று ஆசிரியர்கள் கறுப்புக் கைப்பட்டி அணிந்து பாடசாலைகளுக்குச் சென்று அங்கு மாணவர்களால் நடாத்தப்படும் ஆசிரிய தின விழா முடிவுற்றதும்,சுகவீன லவில் வீடு திரும்பிவிட வேண்டும்.

எமது கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்டவர்கள் எந்த நடவடிக்கைகளும் எடுக்காததால் நாம் இரண்டாம் தடவையாக சுகவீன லீவு எடுககவுள்ளோம். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு 10 மாத சம்பளப் பணம் கடனாக வழங்குவதென கல்வி அமைச்சு முன்னர் தெரிவித்திருந்தும், இன்னமும் அது வழங்கப்படவில்லை.

தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்குக் கூட இப்பணம் வழங்கப் படவில்லை. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிட்டத்தட்ட 3 ஆயிரம் ஆசிரியர்களுக்கு கடன்களை வழங்குவதற்கு அரசாங்கம், மாகாணசபைகளுக்கு போதிய நிதி வழங்கவில்லை. இவர்களுக்கு உடனடியாக வழங்கும் ஒருமாதச் சம்பளப் பணம் இன்னமும் வழங்கப்படவில்லை. அத்துடன், இவ்விடங்களிலுள்ள பிள்ளைகளுக்கு பாடசாலைப் புத்தகங்களும், சீருடையும் கூட இன்னமும் வழங்கப்படவில்லை. இவ்வாறு அவர் அடுக்கடுக்காய் குற்றஞ்சாட்டினார்.

(உ-6)

# பல்வேறு நாட்டுப் பிரமுகர்களையும் பிரதமர் ரணில் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

ஐ.நா.சபையின் கூட்டத் தொடரில கலந்து கொள்வதற்கென அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா அங்கு தொடர்ந்து பல்வேறு நாடுகளின் அரசியல் தலைவர்களைச சந்தித்து கலந்துரையாடி வருகின்றார்.

நேற்று முன்தினம் பிரதமர் ரணில விக்கிரமசிங்கா, இந்தோனேஷியா ஜனாதிபதி மேகவதி சுவர்ணோபுத்திரியைச் சந்தித்து இருதரப்பு உறவுகள குறித்தும், இலங்கை இந்தோனேசிய நாடுகளின் பாதுகாப்பு நிலவரம் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார்.

இக் கலந்துரையாடலின் போது வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேனாட் குணதிலக, ஐக்கிய நாடுகளிற்கான இலங்கைத் தூதுவர் சார்லி மகேந்திரன் ஆகியோரும் உடனிருந்தனர்:

தொடர்ந்து ஹேபேட்லியின் வெளிவிவகார அமைச்சர் மற்றும் லக்பியா நாட்டின் ஜனாதிபதி ஆகியோரைச் சந்தித்து. பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதேவேளை, நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர் சென் பிரதமர் ரணிலைச் சந்தித்து சமாதான நடவடிக்கைகளின் தற்போதைய நிலை குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இச்சந்திப்பின் போது பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்காவிற்கான இலங்கைக் தூதுவர் தேஹிந்த சுபசிங்க ஆகியோரும் உடனிருந்தனர்.

(உ-61,8)

# மாவீரர் துயிலும் இல்லத்தில் மாணவர்கள் சிரமதானப் பணி

## கண்காணிப்புக்குழு விசாரணை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் மாவீரர் துயிலும் இலலத்தில், மாணவர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டமை தொடர்பில் யாழ். மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப புக் குழு விசாரணைகளை மேற் கொண்டுள்ளது .

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர் கள் குழுவொன்று கடந்த 22 ஆம் திகதியன்று தியாகி திலீபனின் 16 வது ஆண்டு நினைவு தினத்தை யொட்டி கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டிருந்தது.

இதனை தொடர்ந்து, பாடசாலை நிர்வாகத்துடன் கண்காணிப்புக்குழுவினர் தொடர்பு கொண்டு, புலிகளுடன் தொடர்புடைய துயிலும் இல்லத்தில் மாணவர்கள் சிரமதானப் பணிகளை மேற்கொள்வது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஏற்றதல்ல என்ற சாரபட கருத்துத் தெரிவித்துள்ளதுடன், மேலதிக விபரங்களையும் கோரியுள்ளனர்.

இதேவேளை, கண்காணிப்புக் குழுவின் இந்த நடவடிக்கை குறித்து மாணவர் தரப்பு அதிருப்தி கொண்டிருப்பதாகக் கூறப்படுறது.

(உ-4)

# தியாகதீபம் திலீபனின் நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் திலீபனின் 16வது ஆண்டு நினைவு தின நிகழ்வு நேற்று மு.ப. 10 மணியளவில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்றது.

த.கஜன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு தியாகதீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தியதுடன், நினைவுரைகளையும் நிகழ்த்தினர்.

(உ)

# இராணுவ பவுசர் மோதி இளைஞன் படுகாயம்

(திருநெல்வேலி)

வடமராட்சி பொலிகண்டிப் பகுதியில் நேற்று அதிகாலை பாண் வியாபாரி ஒருவரை இராணுவத்தின் தண்ணீர் பவுசர் மோதிவிட்டு தலைமறைவாகியுள்ளது

மேற்படி சம்பவத்தில் வியாபாரி மூலை பருத்தித்துறையைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி பிறேமானந்தன் (வயது-26) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பாண் வியாபாரத்தை மேற்கொள்ளும் பொருட்டு அதிகாலை 5.15 மணியளவில் வீதியால் சென்று கொண்டிருந்த வேளையில் வெளிச்சமின்றி வந்த இராணுவத்தின் தண்ணீர் பவுசர் அவரை மோதிய பின்னர் அவ்விடத்தில் நிற்காது சென்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்து வீழ்ந்து கிடந்த பிரஸ்தாப நபரை அருகில் உள்ள சோதனைச் சாவடியில் இருந்த படையினர் தூக்கிச் சென்று தமது இராணுவ முகாமில் வைத்து சிகிச்சை அளித்துள்ளனர்.

(ந-43)

# முஸ்லிம்கள்-புலிகள் சந்திப்பில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப் புலிகளுககும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையிலான அம்பாறை மாவட்டப் பிரச்சினைகள் குறித்து ஆராயும் உயர் மட்ட மாநாடு ஒன்று நேற்று முன்தினம மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தலைமையில் ஆலையடி வேம்பு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் தலைமையில் பிராந்திய அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பாபா , தளபதி ஜனார்த்தனன், பாராளுமன்ற உறுப்பினர் அ.சந்திர நேரு ஆகியோர் தமிழர் தரப்பில் கலந்து கொண்டனர்.

முஸ்லிம்களின் தரப்பில் எம்.ஐ. எம்.முகாதீன் தலைமையில் சட்டத தரணி எஸ்.முத்துமீரான், எஸ்.எம்.ஏ ஹரீம் மௌலவி, டாக்டர் ஏ.எல்.பாறுக ஆகியோரும் கலந்து கொண்டனர்.

காலை 9மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பு முற்பகல் 11.45மணி வரை நடைபெற்றது. உடும்பன்குளம பிரதேச வயல்கள் தவிர ஏனைய காணிப்பிரச்சினைகள் அனேகமான வற்றிற்கு இதில் தீர்வு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(உ-61,8)

# பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே சமாதானத்தை அடைய முடியும்

## இராணுவ பட்டமளிப்பு விழாவில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)

பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே நிரந்தர சமாதானத்தை அடைய முடியும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார். ஜெனரல். சென் ஜோன்ஸ் கொத்தலாவலை பாதுகாப்பு நிறுவனத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துளளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

எதிர்பாார்க்கப்படும் சமாதானம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மட்டுமானதாக அமையாது அது நாட்டு மக்கள் அனைவரிற்கும் பொதுவானதாக அமைய வேண்டும்.

இதேவேளை நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டாலும் தற்போது நிலவும் வன்முறைகள் நிறைந்த அரசியல் கலாசாரத்திற்கு முற்றுப் புள்ளி வைக்காவிட்டால் சமாதானம் பயனற்றதாகிவிடும்.

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு எனத் தெரிவித்தார்.

மேலும் நிரந்தர சமாதானத்தை அடைய முற்படும் வழிமுறையில் சில மாற்றங்கள் தென்படுவதாகவும ஜனாதிபதி அங்கு சுட்டிக்காட்டினார்.

(த-61,10)

## தியாகி திலீபனின்....

அமைந்துள்ள இடத்திலிருந்து நினைவூர்திப் பவனியும்,மக்கள் பேரணியும் நல்லூர் ஆலய முன்றலுக்குச் சென்று அங்கு அடையாள உண்ணாவிரத நிகழ்வு இடம் பெறும் என்று யாழ்.நல்லூர்க் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ் அஞ்சலி நிகழ்வுகளில் அந்தந்தக் கோட்டங்களிலுள்ள பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், அரச திணைக்களங்களின் பணிப்பாளர்கள் அனைவரும் அனைத்துப் பணிகளையும் முற்றாக நிறுத்தி தமது பிரதேசத்தில் நடைபெறும் உண்ணவிரத நிகழ்விலும் கலை நிகழ்வுகளிலும் பங்கு கொள்ளுமாறு அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

(இ-5)

## ஜேர்மன்....

கொணடிருக்கிறது.அத்துடன் இலங்கை அரசு மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு ஜேர்மன் அரசு தனது பூரண ஆதரவை வழங்கிவருகிறது.

அதுமட்டுமன்றி ஜேர்மன் அரசு இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கும் கணிசமான அளவு உதவிகளைச் செய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-63.10)

## நோர்வேயின்....

பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக நியூயோர்க் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் மற்றும் சிங்கப்பூர், பிரிட்டன், அவுஸ்ரேலியா வெளிவிவகார அமைச்சர்களையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

(ம)

## ஐரோப்பிய....

னால் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு சமஷ்டி ஆட்சி குறித்து ஆராய்வதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காது போயிருக்கும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்நிலையில் இங்கிலாந்தின் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் விடுதலைப் புலிகள் இடம் பெற்றிருப்பதாகவும் அமெரிக்கா கனடா ஆகிய நாடுகள் அவர்களை பயங்கரவாத இயக்கமாகப் பெயரிட்டுள்ளதாக இருந்த போதும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அவர்கள் பயங்கரவாத இயக்கத்தின் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## புலிகள்....

தொடர்பான பதில் திட்ட வரைபை அரசிடம் சமர்ப்பிப்பதற்கு முன் விடுதலைப் புலிகள் தமது சட்டவல்லுநர்களுடன் மீண்டும் அயர்லாந்தில் மீளாய்வு செய்யவுள்ளதாகவும் அடுத்த மாதம் இரண்டாவது வாரத்தில் தமது திட்ட வரைபை நோர்வே அரசு மூலமாக எம்மிடம் சமர்ப்பிக்கப் போவதாகவும், விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் அரசு மீண்டும் நேரடிப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமானால் அது தொடர்பாக நாடுதழுவிய ரீதியில் அரசு, பிரசாரவேலைகளில் ஈடுபடும். அதிகாரப்பகிர்வு, சமஷ்டி அமைப்புத் தொடர்பாக மக்கள் மத்தியில் நிலவும் குழப்பங்களைக் களையுமுகமாக விளக்கங்களை அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ,மதத் தலைவர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் வழங்கவுள்ளனர்.

இடைக்கால நிர்வாக சபை ஒன்று உருவாக்கப்பட்டால் அன்றி விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ளப் போவதில்லை என்று தெரிவிக்கப்படும் செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை என்று தெரிவித்த அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சமாதான முயற்சிகள் குறித்த முடிவுகள் தீர்மானங்கள் யாவும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு விடப்படுமெனவும் அதன் பின்னால் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு மக்களின் அங்கீகாரம் பெறப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

(ம-10)

# ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கு மூடுவிழா

(கொழும்பு)

இரு மாணவ குழுக்களிற்கு இடையே இடம்பெற்று வந்த மோதல சம்பவம் காரணமாக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது.

இதேவேளை அனைத்துப் பல கலைக்கழக மாணவர் பேரவையைச சேர்ந்தோர் தம்மை மிலேச்சத்தனமாக தாக்கியதாக சுயாதீன மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவத்தின் போது செய்தி சேகரிக்கச் சென்ற சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த 3 பேர் மிக மோசமாகத் தாக்கபட்டுள்ளதுடன் நிறுவனத்திற்குச் சொந்தமான 35 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களும் பல்கலைக் கழக மாணவர் பேரவையினால் அடித்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இத்தாக்குதல் சம்பவத்தில் தேசிய பிக்குமார் முன்னணியைச் சேர்ந்த சிலரும் ஈடுபட்டிருந்தாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

(உ-60,10)

# ஆட்டோவில் வந்தோர் குடும்பஸ்தர்மீது தாக்குதல

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கு பூதர் மடப்பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் ஆட்டோவில் வந்த சிலரால் தாக்கப்பட்டுள்ளார்.

காணி உரிமை சம்பந்தமான தகராறே தாக்குதல் சம்பவம் வரை சென்றுள்ளது.சம்பவம் பற்றி கேள்விப்பட்ட நீர்வேலி அரசியல்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(த-5)

## மன்னார்....

கொண்டனர்.

நேற்றுக் காலை திறந்து விடப்பட்டுள்ள மன்னார் மடு வீதி தினமும் காலை 7மணி முதல் இரவு 7 மணிவரை மக்கள் பாவனைக்கு விடப்படும்.

இராணுவத்தினரால் இவ்வீதி மூடப்பட்டிருந்த போது அப்பகுதி மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமத்தை எதிர் நோக்கியிருந்தனர்.

(ம)


## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்

**மார்க்கண்டு விஜயகாந்தன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கை வங்கி மேற் தரக்கிளை உத்தியோகத்தர்கள்

[C/6712]



## அன்பு மாணவர்களே!



உங்களின் கவிதைத் திறனை வெளிப்படுத்த நவராத்திரி காலத்தில

வலம்புரியில் வெளிவரும்

**நவராத்திரி பாமாலைக்கு**

4 தொடக்கம் 8 வரிக்குட்பட்ட கவிதைப் பாமாலைகளை அனுப்பி வையுங்கள்

மு.குறிப்பு: மாணவர்களுக்கு மட்டும் இதில் சந்தர்ப்பம் வழங்கப் படுவதால் மாணவர்கள் தமது சொந்த ஆக்கத்தை பாடசாலையின் பெயருடன் அனுப்பி வைக்க வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**நவராத்திரி பாமாலை**

வலம்புரி

இல.15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.